S. Nadarajah
Vaddukkoddai

ஒரு சதம் 5 — முதற் பதிப்பு — பக்கங்கள் 6

# சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL-SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

Telegrams: 'SUYANTIRAN' COLOMBO — Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களினதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சனிக்கிழமை மீ 24உ செல்வாய்க்கிழமை — Colombo, December, 9 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 25 | இதழ் 188

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு.

"சுதந்திரன்"
(தினம் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு.

## கொழும்பில் குடியிருப்புவசதிக்கு திண்டாட்டம்

### ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டும் திட்டத்திற்கு உதவியளிக்க அரசாங்கத்தின் நடவடிக்கை

### சிமந்தி, மரங்கள், செங்கல்கள் சேகரிக்க ஏற்பாடு

கொழும்பு, டிச. 8

கொழும்பு நகரசபை எல்லைக்குள் ஜனங்களுக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத்தவதற்காக ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டும் திட்டமொன்றை இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் கொழும்பு நகரசபை நிறைவேற்றுமென்று தெரிய வருகிறது.

கொழும்பில் குடியிருக்க வீடுகள் கிடைக்காமல் ஏராளமான ஜனங்கள் திண்டாடுவதால், அதிலும் முக்கியமாக மத்தியதர வகுப்பினருக்கும் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு வசதி இல்லாதிருப்பதாலும், கொழும்பு நகரசபையால் மட்டும் இம்முயற்சியை ஆரம்பித்து நடத்தமுடியாதென்று கருதி இலங்கை அரசாங்கம் வந்து வேலை செய்ய முன்வரும் என்று தெரியவருகிறது.

வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் முன்வந்த உதவி செய்வதாக கொழும்பு நகரசபைக்குத் தெரிவித்திருக்கிறது.

அதற்கிடையே இத்திட்டத்திற்கு எவ்வளவு தளவாடங்கள் சேகரிக்க முடியுமென்பதைக் குறித்து ஆராய ஸ்தல ஸ்தாபன மந்திரி பல அரசாங்க இலாக்காக்களின் தலைவர்களிடை மகாநாட்டைக் கூட்டினார். இப்பெரிய திட்டத்திற்கு ஒவ்வொரு இலாக்காவும் எவ்வளவு சாமான்களைத் தயாரித்துக் கொடுக்க முடியுமென்பது பற்றி ஆலோசிக்கப் பட்டது. இதுசம்பந்தமாக கைத்தொழில் இலாக்கா இறக்குமதியான மெந்தியால் செங்கல்கள் செய்வது பற்றி பரீட்சார்த்த வேலை செய்து வருகிறது. காங்கேசன்துறை சிமந்தி தொழிற்சாலையில் சிமந்தி உற்பத்தியாகும் வரை இறக்குமதியாகும் மெந்தியால் செங்கல்கள் செய்யப்படும்.

புதிய வீடுகளுக்கு ஆயிரக்கணக்கான நிலைகளும் கதவுகளும் ஜன்னல்களும் தேவைப்படுமாதலால் தச்சு வேலை நடைபெறும் தொழிற்சாலைகளை யந்திரசாதனப்படுத்தும்படி கைத்தொழில் இலாக்காவுக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது.

அதிகமான மரங்கள் தேவைப்படுமாதலால் இலங்கை காடுகளிலிருந்து போதிய மரங்கள் சேகரிக்கும்படி காட்டிலாக்காவுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது.

எவ்வளவு செங்கல்கள் அவரவர் சூளைகளில் உற்பத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவிக்கும்படி செங்கல சூளைகள் வைத்து நடத்துகிறவர்களுக்கு அரசாங்கம் எழுதிக கேட்டிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க சூளைக்காரர்களுக்கு அரசாங்கம் பண உதவியும் செய்யக்கூடும். தனிப்பட்டவர்கள் முயற்சிக்குப் பங்கம் வரும் என்று கருதி அரசாங்கம் சொந்தமாக செங்கல்சூளை ஏற்படுத்த முன்வரவில்லை.

இப்புதிய திட்டத்தின்படி ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டுவதில் வேலையில்லாத திண்டாடும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவார்கள்.

கொழும்பில் வீடு கட்டும் திட்டம் ஆரம்பமான பிறகு தெற்கு மாகாணத்திலும், கண்டியிலும் காலியிலும் இதேபோன்று வீடுகள் கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

## கோனுபட்டில் துணிகரக் கொள்ளை

புதுக்கோட்டை டிச. 6

புதுக்கோட்டையிலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள கோனுபட்டு என்னும் நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழும் ஊரில் ஒரு துணிகரக் கொள்ளை நடைபெற்றது. கொள்ளைக் கூட்டத்தார் 12 பேர்கள் கத்தி, அரிவாள், கம்பு, துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் வந்து ஒர் செட்டியார் வீட்டைக் கொள்ளையடித்தனர். டிசம்பர் முதல் தேதி இரவு 7 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது. அவ்வீட்டிலிருந்த நகைகளும் ரொக்கமுமாக 48600 ரூபாயைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொள்ளைப் பொருட்களை எடுத்துக்கொண்டு ஓட எத்தனிக்கும்போது ஊரிலுள்ள ஜனங்கள் திரண்டனர். உடனே கொள்ளைக்காரர்கள் துப்பாக்கிகளால் கூட்டத்தைநோக்கி சுட்டனர். அதிலே கூட்டம் நான்கு கொள்ளைக்காரர்களைத் துரத்தியது. கூட்டத்திலுள்ள பலர் துப்பாக்கி பிரயோகத்தால் காயமடைந்தார்கள்.

ஒருவனைத் தவிர மற்ற கொள்ளைக்காரர்கள் அனைவரும் கொள்ளைப் பொருளுடன் தப்பியோடி விட்டனர். ஒருவனை ஊரார் பிடித்துக்கொண்டனர்.

துப்பாக்கி பிரயோகத்தால் 28 பேர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்களில் 6 பேர்களின் நிலைமை ஆஸ்பத்திரியில் அபாயகரமாக இருக்கிறது. போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

## பர்மா பிரதம மந்திரி

### சாரநாதத்துக்கும் புத்தகயாவுக்கும் விஜயம்

புதுடில்லி, டிச. 6

பர்மா பிரதம மந்திரி தக்கின் நுவும் அந்நியநாட்டு மந்திரி யூ டின்டுட்டும் டிசம்பர் முதல் தேதி இங்கு வந்து சில தினங்கள் தங்கியிருந்து இந்தியா பிரதமர் பண்டித நேருவைச் சந்தித்து இந்தியா-பர்மா உறவுபற்றிய பல பிரச்சினைகளைப்பற்றி கலந்து பேசிவிட்டு நேற்று பர்மா திரும்பினார். அவர்கள்போகும் வழியில் சாரநாதத்துக்கும் புத்தகயாவுக்கும் விஜயம் செய்வார்கள்.

## சர்ச்சில் திட்டம் போடுகிறார்

### பிரிட்டனுக்கு ஆபத்து வந்துவிட்டதாம்

லண்டன், டிச. 6

திரு. வின்ஸ்டன் சர்ச்சில் இன்று 6000 கன்சர்வேடிவ்கள் கூடியிருந்த கூட்டத்தில் பேசியபோது சோஷியலிஸ்ட் ஆட்சியால் பிரிட்டனிலுள்ள 480 லட்சம் மக்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டதென்றும், வாழ்க்கை வசதிக் குறையால் கால்வாசி மக்கள் நாட்டிலிருந்து வெளிறந்துவிடுவார்கள் என்றும் பிரிட்டனுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்றும் கூறினார்.

நாட்டின் செலவினத்தில் 50 கோடி பவுண்குறைக்கவேண்டுமென்றும் ஓளவுக்கு வாழ்க்கை வசதிகளையும் தொழில் வசதிகளையும் நிலை நிறுத்த நிர்வாகக் கட்டுப்பாடுகள் விலக்கவேண்டுமென்றும், பின்னர் ஜனங்கள் சுயமுயற்சியில் முன்னேற விட்டுவிடவேண்டுமென்றும், பவுண்-ஸ்டெர்லிங்கின் லார்டும் சக்தியை நிலை நிறுத்த வேண்டும் என்றும், அமெரிக்காவின் தோழமையை பலப்படுத்தவேண்டுமென்றும், சாமராஜ்ய நாடுகளின் ஐக்கியத்தைப் பலப்படுத்தினால்தான் பிரிட்டன் வாழமுடியுமென்றும் ஒரு ஆறு அம்ச திட்டமொன்றையும் வெளியிட்டார்

[ராய்ட்டர்]

## கடலில் குதித்துத் தப்பி ஓட முயற்சி

### பிரஞ்சுசோல்ஜர்களில் ஒருவர் பிடிபட்டார்

சிங்கப்பூர், டிச 6

இந்தோசைனுவுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பிரஞ்சு துருப்புக் கப்பலிலிருந்த சில பிரஞ்சு சோல்ஜர்கள் மலாக்கா கடலிலே ஒரு மரக் கட்டையைப் போட்டு அதனருகே கடலில் குதித்துத் தப்பியோட முயன்றனர். அவர்களில் ஒருவர் 12 மணிநேரம் கடலில் நீந்தி தவித்துப்போய் கடற்கரைக்கு ஐந்தாறுமைல்தூரத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது மலேயா படகோட்டிகள் அவரைப் பிடித்த பட்டில் போட்டுக்கொண்டுவந்தனர். பிறகு அவரை சிங்கப்பூர் போலிசார் கைதுசெய்தனர்.

## 80 லட்சம் டாலரைப் பிடித்துக்கொள்

### ஜெர்மனிக்கு அமெரிக்காவின் செலவில் பிரிட்டன் உதவு

வாஷிங்டன், டிச. 6

அமெரிக்க சென்ட் சபையின் வரவு செலவுத் திட்டக் கமிட்டித் தலைவர் திரு. பிரிட்ஜஸ், அமெரிக்க பொக்கிஷ மந்திரி திரு ஸ்நீடருக்கு மேற்கண்ட கடிதம் அனுப்பியிருக்கிறார்:—

பிரிட்டனுக்குக் கொடுத்தகடனில் அமெரிக்கா முடக்கி பிருந்த 40 கோடி டாலர் இப்போது விடுவிக்கப்படுவதால் அதனோகையிலிருந்து, ஜெர்மன் நிர்வாகத்திற்கு அமெரிக்கா செலவு செய்த தொகையில் பிரிட்டனிடமிருந்து வரவேண்டிய பங்கு தொகை 80 லட்சம் டாலரைப்பிடித்துக் கொள்ள வேண்டும்.

(ராய்ட்டர்)

## 9 லட்சம் மூட்டை சர்க்கரை

### பொதுஜனஉபயோகத்திற்கு தாராளசர்க்கரைகன்டிகேட்முடிவு

விற்பனையாளர் வாங்க வேண்டிய முறை

கான்பூர், டிச. 5

சர்க்கரை கன்ட்ரோல் எடுபடுவதை முன்னிட்டு கைவசம் 1946-47ன் மிச்ச இருப்பாக உள்ள சுமார் 9 லட்ச மூட்டை சர்க்கரையை பொதுஜன உபயோகத்திற்காக கொடுத்துவிட கான்பூருள்ள இந்திய சர்க்கரை சிண்டிகேட் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமாகசின்டிகேட் வெளியிட்டிருக்கும் அறிக்கை கூறுவதாவது:- "சர்க்கரை கன்ட்ரோல் ரத்தாவதை முன்னிட்டு மில் ஸ்தாபனங்கள் பொதுஜன சௌகரியத்திற்காக விலக்கே நியாயமான ஒரு அளவுக்கு குறைக்க வேண்டிய அவசியம் ஏறபட்டிருக்கிறது. இந்த காரியத்திற்காக இந்திய சர்க்கரை சின்டிகேட் கைவசம் மிச்சமாக இருக்கும் சுமார் 9 லட்சம் மூட்டை சர்க்கரையையும் பொதுஜன உபயோகத்திற்கு கொடுத்துவிட முடிவு செய்திருக்கிறது. இதற்காக முக்கியமாக பொதுஜன ஸ்தாபனங்களும், இதரர்களும் விண்ணப்பித்துக்கொள்ளலாம். மணங்குக்கு ரூ 34க்கு அதிகப்படாத விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். விண்ணப்பங்களுடன் மூட்டைக்கு ரூ 5 வீதம் டெபாஸிட் தொகை அனுப்பி வைக்க வேண்டும்."

பம்பாய், டிச. 6

'கல்கத்தா' என்ற ஆங்கிலப் படத்தை மாகாணமெங்கும் காட்டக்கூடாதென பம்பாய் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

## பண்டித நேருவிடம் பூரண நம்பிக்கை

### இலங்கை இந்திய தலைவர் அறிக்கை

கொழும்பு, டிச 7

இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீ சேனாயக்காவுக்கும் இடையே நடைபெறவிருக்கும் சம்பாஷணை பற்றி ஓர் அறிக்கை வெளியிடுகையில் இலங்கை இந்திய காங்கிரசுக்கு முக்கியமாக தொழிலாளிகளுக்கு பண்டித நேருவிடம் முழு நம்பிக்கையிருப்பதாகவும், தங்கள் நலன் சரியானவர்கள் கையில் பத்திரமாக இருப்பதாக கருதுவதாகவும், தங்கள் சொந்த பொறுப்பை பாதுகாப்பதில் தவறமாட்டார்கள் என்றும் இலங்கை இந்தியன்காங்கிரஸைச் சேர்ந்த ஸ்ரீ ஜி. ஆர். மோத்தா தெரிவித்தார்.

இப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஏற்படும் ஒப்பந்தம் இலங்கை இந்தியர்கள் ஏற்கக்கூடியதாக இருக்காது என்று தாம் பேசியதாக ஸ்ரீ சேனாயகா சுட்டிக்காட்டி இருப்பதை ஸ்ரீ மோத்தா மறுத்தார். ஜனப் பிரதிநிதிகள் சபையின் அனுமதியின்றி இலங்கை-இந்தியா பிரச்சினைகளை விவாதிக்க பண்டித நேருவை சந்திக்க ஸ்ரீ சேனாயகா ஏற்பாடு செயதிருப்பதைத்தான் ஸ்ரீ மோத்தா சுட்டிக்காட்டியதாக கூறினர்.

## அகதிகள் முகாமுக்கு ஸ்ரீமதி பண்டிட் விஜயம்

ஜம்மு, டிச. 6

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட, ஷேக் அப்துல்லா தம்பதிகளுடன் இன்று அகதிகள் முகாமுக்கு விஜயம் செய்தார்.

## அமெரிக்காவின் ரப்பர் தந்திரம்

### ஆங்கிலோ - அமெரிக்க ஒப்பந்த மோசடி

லண்டன், டிச. 7

ஆங்கிலோ-அமெரிக்க ரப்பர் ஒப்பந்தத்தில் அமெரிக்கா தந்திரமாக ஏமாற்றியிருப்பது பற்றி கடியசேகிரம் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள் என்று 'சண்டே எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் பொருளாதார நிருபர் எழுதியிருந்தார். அவர் தெரிவிப்பதாவது:- ஜனவரி ஒப்பந்தத்தை முன்னிட்டு அமெரிக்காவும் பிரிட்டனும் செய்து கொண்ட ரப்பர் ஒப்பந்தப்படி பிரிட்டனுக்கு வருடத்திற்கு 70 லட்சம முதல் ஒரு கோடி பவுண் வரை டாலர் சேமிப்பு ஏற்படுமென்று முதலாவது கருதப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் பெரிய தப்பு செய்துவிட்டதாக ரப்பர் உற்பத்தியாளர்கள் உடனே முன்வந்து உண்மையை பகிரங்கப்படுத்தினர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் ரப்பரை அமெரிக்கா வாங்குவதாகவும், இப்பொழுது அமெரிக்கா முன்றில் ஒருபங்காக உபயோகிக்கும் செயற்கை ரப்பரை இனி காலபங்காக உபயோகிப்பதாகவும் அமெரிக்கர் உடன்பட்டிருக்கின்றனர். மூன்றில் ஒரு பங்கு என்பது இயற்கை ரப்பராகும். பொதுவாக உபயோகிக்கப்படும செயற்கை ரப்பரும் சேர்ந்ததேயாகும். கால்பங்கு என்பது எல்லா விதங்களிலும் உபயோகிக்கும் செயற்கை ரப்பர் மட்டுந்தான். இதனபடி கணக்கிட்டுப் பார்த்தால அமெரிக்கா முன்னர் செயற்கை ரப்பரை எந்த அளவுக்கு உபயோகிக்கப்பட்டதோ அதே அளவுக்குத்தான் புதிய ஒப்பந்தபடி இனியும் உபயோகிக்கும். ஆகவே முக்கியமான சலுகை நமக்குக் கிடைத்துவிட்டதென்று சொல்லும் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ஏமாந்து போனார்கள். அமெரிக்க வர்த்தகம் செழிப்பதற்காக நமது சலுகை வரிகளைத் தியாகம் செய்துவிட்டார்கள்.

தவறு ஏற்பட்டிருப்பது உண்மைதானென்றும் அதை சரிப்படுத்த ஏதாவது செய்ய வேண்டுமென்றும குடியேற்ற நாட்டு மந்திரி காரியாலயப் பிரதிநிதி யொருவர் தெரிவித்தார். இது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் கூடிய சீக்கிரம் அறிக்கை வெளியிடுவார்கள். (ராய்ட்டர்)

## ஏடனிலும் யூதர் - அராபியர் கலகம்

### இரு இந்தியரும் மாண்டனர்

### பிரிட்டிஷ் கடற்படை விமானப்படை வருகை

ஜெருசலேம், டிச. 6

டெல்அவிவ் நகருக்கு இலுள்ள அபுகபீர் என்ற அராபிய கிராமத்தை யூதர்கள் ஆயுதங்களுடன் சென்று தாக்கினர். 13 அராபியர்கள் காயமடைந்தனர்.

இன்று ஜெருசலேம் பழைய நகர் எனும் அராபியர் ரகசியத்தாபனத்தின் தண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிட்டதால் மதப்போருக்கு அராபியர்கள் முன்வருக என்று பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டிருந்தது. அராபிய ரகசிய ரேடியோவும் நிறுவப்பட்டிருப்பதாக அறிவித்தது.

அராபியர் மீன்பிடிக்கப்பலை சட்டவிரோதமாக குடியேற வரும் யூதர்கப்பல் என்று கருதி அராபியர்கள் அராபியக் கப்பலையே தாக்கினர். பிறகு உண்மைதெரியவேண்டைன்றது

சிரியாவில் நிர்ப்பந்திக்கப்படும் ராணுவத்தில் எல்லா அராபியர்களும் சேரக என்று ரகசிய அராபிய ரேடியோ ஒலிபரப்பியது.

லண்டனிலுள்ள அராபிய மாணவர்கள் கட்டம் லண்டனில் நடைபெற்றபோது யூதர்களுக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்கும்படி அராபிய உலகிற்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர்.

### ஏடன் கலகம்

பிரிட்டிஷ் குடியேற்ற நாடான ஏடனில் யூதர் அராபியர்களுக்குள் கலகம் ஏற்பட்டதில் 27 யூதர்களும் 28 அராபியர்களும் 2 இந்தியர்களும் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் கடற்படையும் விமானப்படையும் அங்கு அனுப்பப்பட்டன. அதன் பிறகு அமைதி ஏற்பட்டது. அராபிய லீக் கவுன்சில் கூட்டம் நிகழ்ச்சிமுறை கெய்ரோவில் நடைபெறும்.

ஜெருசலேம் மூனிபெல் தலைவர் திரு இரேவன் மோட்டார் மீது கற்கள் வீசப்பட்டன அவர் இன்று உயிர் தப்பினார்.

பாலஸ்தீனம் பிரிக்கப்படும்போது அமைதியை நிலைநாட்டநிறுவப்படும்சர்வதேசப் படையில் சேப்படையும் கலந்துகொள்ள அமெரிக்கா சேனத்தின் அபிப்பிராயத்தை அறிவதாகத் தெரிகிறது.

## இந்தியா-பாகிஸ்தான் நிதி உடன்படிக்கை?

கராச்சி, டிச. 6

ரொக்க மிச்சங்கள், ஸ்டெர்லிங் மிச்சங்கள் முதலியவை பற்றி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிதி உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இவ் உடன்படிக்கை இங்கிலண்டு லாகூரில கையெழுத்தாகும் என்றும் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக பாகிஸ்தான் நிதி மந்திரி ஸ்ரீ குலாம் முகம்மது ஞாயிறன்று லாகூருக்கு வருகிறார். (யு-பி)

## சென்னையில்ஒளித்திருந்த திருட்டு ஆயுதங்கள்

### சில போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன

சென்னை, டிச 6

சென்னையின்றி ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் சிலரில் உள்ள எத்த போலிஸ் ஸ்டேஷனிலாவது அவற்றைக் கொண்டுபோய் கொடுத்து விடலாமென்றும், அப்படி டிசம்பர் 20-ம் தேதிவரை ஆயுதங்களை ஒப்படைப்பவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாதென்றும் போலிஸ்கமிஷனர் அறிவித்திருந்ததனால் சில ஆயுதங்கள் போலிசார் வசமாகி இருக்கின்றன என்று விசாரித்ததில் தெரிகிறது

டிச 20-ம் தேதிக்குப் பின்னர் அனுமதியின்றி ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அப்படி வைத்திருப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## சீன - டச்சு விமான ஒப்பந்தம்

நாங்கிங், டிச. 6

சீன சர்க்காரும் டச்சு சர்க்காரும் சீனப்பிரதேசங்களுக்கும் டச்சுப் பிரதேசங்களுக்குமிடையே மூன்று மார்க்கங்களில், விமானப் போக்குவரத்து நடத்த இன்று நான்கு வருட ஒப்பந்தம் செய்து கொண்டனர். சீன அந்திய நாட்டு மந்திரியும் டச்சு ஸ்தானிகரும் கைச்சாத்திட்டனர். சீன விமானங்களும் டச்சு விமானங்களும் இப்பாதைகளில் விமானப் போக்கு வரத்து நடத்தும். முன்று பாதைகள் பின்வருமாறு:-

1. சீனத்தில் குன்மிங்கிலிருந்து புறப்பட்டு இந்தியா, சமீப கிழக்கு, வட ஆப்பிரிக்கா ஆகிய வழியாக ஹாலந்து போய்ச் சேரும் பாதை.
2. சைனுவிலிருந்து புறப்பட்டு பிலிப்பைன் வழியாக டச்சு கிழக்கிந்திய தீவுகளுக்குச் செல்லும் பாதை.
3. சீனத்திலிருந்து புறப்பட்டு இந்தோசைனு, மலேயா, சிங்கப்பூர்வழியாக டச்சுக்கிழக்கிந்திய தீவுகளுக்குச் செல்லும் பாதை.

முதலாவது ஷாங்கை - பட்டேவியா பாதையில் இருநாடுகளின் விமானப் போக்குவரத்து ஆரம்பமாகும். (ராய்ட்டர்)

## நால்வருக்கு ஜெர்மன் தூக்கிலிடி

லண்டன், டிச. 6

ஜெர்மனியைப்பற்றி நான்கு வல்லரசுகளின் அந்திய நாட்டு மந்திரிகளுக்குள் இன்னும் ஒரு ப்படியான விவாதம் ஆரம்பிக்க அடிப்படையான ஒப்பந்தம் ஏற்படவில்லை. இன்று ரஷ்யா பிரதிநிதிமொலட்டோவ்ஜெர்மனியில் பொருளாதார ரீதியாக வகுக்கப்பட்டிருக்கும்பிரதேசங்களை ஒன்றுக இணைக வேண்டுமென்று வாதாடினார். மற்ற பிரதிநிதிகள் இதை ஒப்புக் கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு. போன்: 8411.

சுதந்திரனுக்கு காத்திருக்கை மீ 24ம் செவ்வாய்க்கிழமை


## சண்டை மூட்ட சதியா?

கொழும்பு, நகரசபை மண்டபத்தில் ஒரு தமிழர் கூட்டம் சில நாட்களுக்கு முன்பு நடந்தது. அதை நாம் சுயநலத்தமிழரின் கூட்டம் என்று குறிப்பிட்டிருந்தோம். இது அக் கூட்டத்தைக் கூட்டியவர்களுக்கு சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பத்திரிகைகளில் "சுதந்திரன்" பத்திரிகையையும் தமிழ்க் காங்கிரஸையும் வைதார்களை நெஞ்சிலே கள்ளங்கபடமின்றி வெளியே "சிவசிவா" என்பவர்களை தமிழ் மக்கள் அறிவார்கள். ஆகவே நாம் அவர்கள் வேண்டியவாறு இடமுள்ள பத்திரிகைகளில் எழுதுவதைப் பார்த்திருந்தோம்.

அவர்கள் அன்று நடந்த விஷயத்தை எவ்விதம் திரித்துக் கூறினாலும், உண்மை வெளிவராதுதான் செய்யும். அவ்வுண்மையை இன்று ஒரு சிங்கள சகோதரப் பத்திராசிரியர் வெளியிட்டுள்ளார். அதை "சுதந்திரனில்" இன்று வாசகர்கள் வாசித்துக் கொள்ளலாம். அவ்வாசிரியர் ஓர் சிங்களவர். தமிழரும் சிங்களவரும் இத்தீவில் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று விரும்புபவர். அவர் கூறுவதென்ன? சிங்களச் சண்டியர்கள் பலர் இக் கூட்டத்திற்கு வந்திருந்தார்களாம். "அன்று எதிர்பாராத விதமாக அடிதடி சண்டையும் குடிக் கலகமும் உண்டாகக் கூடிய நிலைமை ஏற்படவில்லை. அப்படி நடந்திருந்தால் தமிழ்-சிங்களவர் சமூகச்சண்டை மூண்டுவிடுவதற்கு இடமிருந்தது" என்று நிடமாகக் கூறியிருக்கிறார் அவ்வாசிரியர்.

இச் சிங்களக் காடையர்களைக் கொண்டு வந்தவர்கள் சேனநாயக்காவுக்குப் பக்தப் பிடிக்கும் தமிழர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழர் சிங்களவர் கலகத்தை ஏற்படுத்தவதற்குத்தான் அக்கூட்டதைச் சில மூதாளிகள் கூட்டியிருக்க வேண்டும் என நம்பவேண்டியிருக்கிறது.

தெய்வ சித்தமாகத் தமிழர் இந்த அபாயத்தில் இருந்து தப்பிவிட்டார்கள். எதிர்காலத்திலு இவைனும் பல இன்னல்களைத் தமிழ் மக்கள் சமாளிக்க வேண்டியிருக்கும். விவஸ்தமானும், சுயநலஸ்தர்களும் ஒன்றுகூடுவார்கள். அரக்குமாளிகைகளையும் கட்டத் தனிப்பார்கள். சிங்களவருக்கும் தமிழருக்கும் எவ்வித பகையும் இல்லை. அத்தகைய சந்தர்ப்பதை ஏற்படுத்த முற்படுவார்கள் சில சிங்கள அரசியல்வாதிகள். தமிழ் மக்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

## பாராளுமன்ற நடவடிக்கை முறை

### பிரிட்டிஷ் இரண்டாவது விகிதர் பிரசங்கம்

கொழும்பு, டிச. 8

நேற்று காலை பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் நடைபெற்ற பிரதிநிதிகள் சபை, சனட் சபை உத்தியோகத்தர்களின கூட்டத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றதின் இரண்டாவது விகிதர் திரு இ. ஏ பெல்லோஸ் பாராளுமன்ற நடவடிக்கை முறைகளைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்தார்.

## மோட்டார் விபத்தில் வாலிபர் மரணம்

கொழும்பு, டிச. 8

பம்பலப்பிட்டியாவில் காலி ரோடில் நேற்று காலை ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த 19 வயதுள்ள எட்மோ ஹெர்பட் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

## தேச பாஷைகளின் அபிவிருத்தி

### கமிட்டியின் சிபார்சுகள்

கொழும்பு, டிச. 8

அரசாங்க உத்தியோகங்களில் சிங்களமும் தமிழும் தெரிந்த குமாஸ்தாக்களை நியமிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக நிதி மந்திரி கலவி மந்திரியுடன் கலந்து பேசிவருகிறார்.

அரசாங்க பாஷைகள் கமிட்டியார், அரசாங்க இலாகாக்களுள் கூடியவரை சிங்களத்திலும் தமிழிலும் அலுவல்களை நடத்த வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். வைதீக இலாகாவில் ஆங்கிலம் தெரியாத தேச பாஷைகள் மட்டும் தெரிந்த தாதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதென்றும் அந்தாதிகள் ஆங்கிலம் படித்ததாதிகளைப்போலவே தொழிலில் நிரந்தமையடையவர்களாக இருக்கிறார்களென்றும் கமிட்டியார் ஓர் உதாரணத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

பள்ளிக்கூடப்பாடப்புத்தகங்களுக்காக அவசியமான புத்தகங்கள் தேச பாஷைகளில்மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்றும் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

மொழிபெயர்ப்பாளர் நிலையமொன்றை ஸ்தாபிக்க கல்வி மந்திரி நடவடிக்கை எடுத்துவருகிறார். இது சர்வகலாசாலையின் நிர்வாகத்திலிருக்கும்படி செய்துள்ள சிபார்சின்படி தேச பாஷைகள் இலாகாவை நிறுவ கல்வி மந்திரி மாகிரி சபையில் ஒரு திட்டம் சமர்ப்பிப்பார். தேச பாஷைகளை கலைச் சாஸ்திரங்களைத் தருவிய சொற்களை அமைக்க ஓர் மொழி ஆராய்ச்சி ஸ்தாபனம் நிறுவவும் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கின்றனர்.

## கழனியா தேர்தல் ஆட்சேபனை மனு

கொழும்பு, டிச. 6

இன்று மூன்று நீதிபதிகள் முன்பு கழனியா தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுவில் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு அதிகமாக இருப்பதால் மனுதாரர் கட்டிய ஜாமின் தொகை 5000 ரூபாய் போதாதென்று பிரதிவாதியான திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சேபித்தார். இந்த ஆட்சேபனையை நீதிபதிகள் நிராகரித்து மனுதாருக்கு செலவு தொகை கொடுக்கும்படி உத்தரவிட்டனர்

ஜனுவரி 13-ம் தேதியன்று மனுவின் மீது விசாரணை ஆரம்பமாகும்.

## குதிரைப் பந்தயத்திற்கு நகரசபை வரி

நுவரேலியா, டிச. 6

ஏப்ரல் மாதம் நுவரேலியாவில் நடைபெறும் குதிரைப்பந்தய கூட்டத்தில் 20 சத விகிதம் தமாஷா வரி விதிப்பதென்றும் ஒலோன் டென்னிஸ் பந்தாட்டுப் சங்கம் நடத்தும் போட்டி விளையாட்டுக்கு 10 சத விகிதம் தமாஷா வரி விதிப்பதென்றும் நுவரேலியா நகரசபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

## டாக்டர் ஜென்னிங்ஸ திரும்பினர்

கொழும்பு, டிச. 8

ஓரிசா மாகாணத்தில் கடடக் நகரில் நடைபெற்ற அகில இந்திய சர்வகலாசாலை போட்டின் வருடாந்தரக் கூட்டத்தற்கு விஜயம் செய்துவிட்டு இலங்கை சர்வகலாசாலை உபஅதியட்சகர் டாக்டர் ஜென்னிங்ஸ நேற்று கொழும்புக்குத் திரும்பிவந்தார்.

இலங்கையில் சீனியர் ஸ்கூல் சர்ட்டிபிக்கட் பரீட்சையில் 6 பாடங்களில்தேர்ச்சியும் 4 பாடங்களில்திறமையான தேர்ச்சியுமடைந்தமாணவர்களை இந்திய மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதாமலே இந்திய சர்வகலாசாலைகளில் சேர்த்துக்கொள்ள சிபார்சுசெய்வதாக இந்திய சர்வகலாசாலை போர்டார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

# பாகிஸ்தானிலும் பாரசீகத்திலும் யூதர்கள்கொலை

## அமெரிக்காவிலுள்ள உலக யூதர் ஸ்தாபன டைரக்டர் அறிக்கை

### ஜெர்மனியிலும் யூதர்-முஸ்லிம்கள் சச்சரவுகள்

### பாலஸ்தீனத்தில் இரு தரப்பாரும் படை திரட்டுகின்றனர்

நியூயார்க், டிச. 7

உலக யூதர் ஸ்தாபனத்தின் அரசியல் டைரக்டரான டாக்டர் ராபர்ட் எல் மார்க்ஸ் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—பாரசீகத்திலும் பாகிஸ்தானிலும் அராபியக் கோரிக்கையை ஆதரிக்கும் முஸ்லிம்கள் அங்குள்ள யூதர்களைக் கொலை செய்துவருகிறார்கள். இந்த இரு நாடுகளிலுமுள்ள யூதர்களை உயிரைப் பாதுகாக்க போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி இரு நாடுகளிலுமிருக்கும் அமெரிக்க ஸ்தானிகர்களுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறேன்.

"பாகிஸ்தானில் பெஷாவர் நகரிலிருக்கும் 200 யூதர்கள் அபாய நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களில் பலரை பாகிஸ்தான் முஸ்லிம்கள் கொன்றுவிட்டனர். பாரசீகத்திலும் முக்கியமாக மேஷெத்திலும், எஸ்பஹானிலுமுள்ள யூதர்கள் அபாய நிலையிலிருக்கிறார்கள. ஜாதி, மத, பாஷை, வர்க்கம், ஆண்பெண், வித்தியாசமின்றி ஒரு அரசாங்கம் தன் ஆட்சியிலுள்ள எல்லா மக்களின் மனித உரிமைகளையும் மூலாதார சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டியது அந்த அரசாங்கத்தின் கடமையாகும் என்பது ஐக்கிய தேச சாஸனக் கொள்கையாதலால் ஐக்கிய தேச சபையில் அங்கம் வகிக்கும் மேற் குறிப்பிட்ட இரு நாடுகளும் யூதர்களைப் பாதுகாக்க அந்நாடுகளின அரசாங்கங்கள் மூன்வர வேண்டும்.

### மீண்டும் போர்

ஜெருசலேம், டிச. 7

டெல் அவிவ்-ஜாபா நகர்களுக்கிடையே மீண்டும் இன்று யூதர்-அராபியர் போர் நடைபெற்றது. துப்பாக்கிகள், பிரங்கிகள், வெடிகுண்டுகள் இரு தரப்பாராலும் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டன டெல் அவிவ் நகருக்கு காய்கறி ஏற்றிச் சென்ற ஒரு யூத லொறி தாக்கப்பட்டதில் நால்வர் காயமடைந்தனர்.

ஐக்கிய தேச சபை பாலஸ்தீன பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றிய நாளிலிருந்து ஒரு வார காலமாக நடைபெற்று வரும் யூதர்-அராபியர் மோதல்களில் 73 பேர்கள் கொல்லப்பட்டனர்.

இப்பொழுது இரு தரப்பாரும் படை திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அராபியர்கள் முரசொலி முழக்கிக்கொண்டு யுத்தத்திற்கு ஆள திரட்டுகிறார்கள். ஜெருசலேமில் அராபியர் படைதிரட்டும் இரு காரியாலயங்கள் திறக்கப்பட்டன. பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க 5 பேர்களடங்கிய அராபியர் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

யூதர்கள் பாலஸ்தீனம் முழுவதிலும் படை திரட்டுகிறார்கள். 17 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட யூதர்கள் ராணுவத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். மொத்தம் 70,000 யூதர்கள் இப் பாதுகாப்புப் படையிலிருப்பார்கள்.

அராபியர் போர் முஸ்தீபு குழப்பங்களையும் அவைகளுக்கு மக்க பலமாக இருக்கும் பிரிட்டிஷாரையும் தாக்கப் போவதாக இன்றிரவு யூத பயங்கரப் புரட்சி இயக்கதார் பயமுறுத்தியிருக்கிறார்கள். யூதர் பாதுகாப்புப் படைகளை பிரிட்டிஷார் தாக்குவார்களேயாகில் பதிலுக்குப் பதில் பிரிட்டிஷார் தாக்கப்படுவர் என்று எச்சரித்து அவர்கள் ரகசிய ரேடியோமூலம் ஒலிபரப்பினர். பிரிட்டிஷார் பாலஸ்தீனதை விட்டுக் காலிசெய்வதுபற்றி யூதப் புரட்சிக்காரர் பிரிட்டனுக்குக்கடடகளை பிறப்பிப்பார்களென்றும் எச்சரித்தனர்.

அராபியர்கள் செய்யும் ஆயுத வர்த்தகத்தில் ஆயுதங்களின் விலை ஏறிவிட்டது.

பிரிட்டிஷ் ராணுவ ஸ்தலங்களிலும் ராணுவ முகாம்களிலும் அராபிய போலீசார் பாதுகாவல் செய்து வருகிறார்கள்.

பாலஸ்தீனத்தில் ரபரப்பான நிலைமை இருந்துவருகிறதென அராபிய மேல கமிட்டிக் காரிய தரிசி அறிவிக்கிறார்.

இக்கமிட்டியின பிரதிநிதிகூடிய சீக்கிரம் கெய்ரோ சென்று பாலஸ்தீன நிலைமைபற்றி அராபி லீக் கவுன்சிலுக்குத் தகவல் கொடுப்பார். அக்டோபர் மாதம் லெபானனில் கூடிய அராபிய லீக் கூட்டம் செய்த தீர்மானத்தின்படி பாலஸ்தீன அராபியர்களுக்கு அராபிய நாடுகள் ராணுவ பொருளாதார ஆதரவுகள் உடனே அளிக்கவேண்டுமென்றும் கோருவார்.

பிரிட்டன்வெளியேறும்வரை பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் நிர்வாகம் சீர்குலையாமல் நடைபெற உதவவேண்டுமென்ற பிரிட்டிஷ் ஹைக்கமிஷனர் கன்னிங்ஹாம் அராபிய மேல் கமிட்டி காரியதரிசியையும் யூதர் சபைத் தலைவரையும் தனித்தனியே அழைத்துத் தெரியப்படுத்தினார்

பாலஸ்தீன பிரிவினைபற்றி நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிக்க ஐக்கிய தேச பாதுகாப்பு சபை செவ்வாய்க்கிழமை கூடும்.

### ஜெர்மனியில்

அமெரிக்க ஆக்கிரமிப்பில் உள்ள ஜெர்மன் பிரதேசத்தில் யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கு மேற்பட்ட சச்சரவில் 9 யூதர்கள் காயமடைந்தனர்; ஒரு யூதர் மாண்டார். மூன்று முஸ்லிம்கள் காயமடைந்தனர். இச்சண்டை முதலாவது உலுமிலும் புது உலுமிலும் சனிக்கிழமை ஆரம்பமாகி மற்ற இடங்களிலும் பரவியது. அகதிகள் முகாம்களிலுள்ள யூதர்களுக்கும், ஜெர்மன் அகதிகள் கமிஷனைச் சேர்ந்த அதிகாரியர், அராபியர், எகிப்தியர், சிரியர் ஆகியோர் முகாம்களிலுள்ள முஸ்லிம்களுக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. (ராய்ட்டர்)

## மணமக்களுக்கு வரவேற்பு

மட்டக்களப்பு, டிச. 6

கோட்டை முனையிலிருக்கும் "ஆனந்த கிரி" என்னும் தங்கவிலாசத்தில் மைனர் ரோட் சுப்பிரமணியருக்கு இன்பப்பாலிய முகாந்திரம் எஸ் ஆம்ஸ்ரோங்குக்கும் பாரியாருக்கும் சில நாட்களுக்கு முன் கொழும்பிலே மணம் செய்து திரும்பிய திரு உவால்ட்டர் ஜே ஆம்ஸ்ரோங்குக்கும், பாரியாருக்கும் சென்ற புதன்கிழமை ஓர் வரவேற்பளித்தனர்.

வரவேற்பின்போது குழுமியிருந்த எலலோரும் சிற்றுண்டி அருந்திய பின் ஏழ் மாகாண ஏஜண்டர் திரு. டி. சி. ஆர். குணவர்தனா, வித்தியா பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். ஜே. குணசேகரரும், பண்டிதர் அருளைல தேசிகர் முதலியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். (ந-நி)

## மரணதண்டனை விதிக்கப்பட்டவர்

### மூவர் தூக்கிலிடப்பட்டனர்

கொழும்பு, டிச. 8

1 ஐராசாமி மகன் இராசு என்பவர் சுப்ரீம் கோர்ட தீர்ப்பின்படி டிசம்பர் மாதம் 1-ம் திகதி கண்டியிலுள்ள போகாம்பறை மறியல வீடடில் தூக்கிலிடப்பட்டார்.

2. முத்துக்கறுப்பன் மகன் அம்லம் என்பவரும் மேற்குறித்த கோர்ட்டின் தீர்ப்பின்படி டிசம்பர் மாதம் 2-ம் திகதி மேற்குறித்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.

3 கெபெல்லே மெற்றியாவே கெதர உக்கு துரயா அலஸ்தரிகே என்பவரும் மேற்குறித்தகோர்ட்டின் தீர்ப்பின்படி டிசம்பர் மாதம் 3-ம் திகதி மேற்குறித்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார். (ந-நி)

## நகரசபைத் தேர்தல் வெற்றியில் மாணவர் சூதாகலம்

மட்டக்களப்பு, டிச 6

சில நாட்களுக்கு முன் மட்டக்களப்பு நகரசபைத் தேர்தலில் 2-ம் வட்டாரத்துக்குப் போட்டியிட்டு வெற்றியடைந்த ஸ்ரீமதி, ரோசலின் எஸ். கனகரத்தனவுக்கு வின் ஸைன் பெண் ராசாலி மாணவிகளாலும் உபாத்தியாயினிகளாலும் அதே பாடசாலை மண்டபத்தில் மேற்று ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

## பிரஞ்சு வேலைநிறுத்தம் ஓயவில்லை

### அரசாங்கத்தின் கோரிக்கைகளில அதிருப்தி

### வெற்றிவரை வேலைநிறுத்தம் செய்ய மத்திய கமிட்டி வேண்டுகோள்

பாரிஸ், டிச 8

சென்ற மூன்று வாரங்களாக பிரான்ஸில் பலமான நெருக்கடியை உண்டுபண்ணிவரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் நிறுத்து விடுவென்ற நம்பிக்கை ஏற்பட்டு வந்தது. ஆனால் அந்நம்பிக்கைக்கு இப்பொழுது பங்கம் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் விடுத்தகோரிக்கைகளுக்கு வேலைநிறுத்தம் மத்திய கமிட்டியார் இடபொழுது எதிர்க்கோரிக்கைகள் விடுத்திருக்கின்றனர். சர்க்கார்கோரிக்கை திருப்திகரமாக இல்லை யென்றும், ஆதலால் வேலைநிறுத்தத்தை பலப்படுத்தி வெற்றி காண வேண்டுமென்று மத்திய கமிட்டியார் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

இன்று லியான்ஸ் நகரக் கருகேயில் கலிழ்க்கப்பட்டது.

பிரான்ஸின் இரண்டாவது முக்கியமான துறைமுகமான லேஹாவ்ரி நகர சபைத் தேர்தலில டிகால் கட்சிக்கு மொத்தமுள்ள 37 ஸ்தானங்களில் 16 ஸ்தானங்கள் கிடைத்தன. சென்ற தேர்தலில் 8 ஸ்தானங்கள்தான் கிடைத்திருந்தன. (ராய்ட்டர்)

ஸ்ரீமதி ஏ. பத்மன், ஸ்ரீமதி ஜீ. ஈரெவ்ற் முதலியோர் வெற்றியைப் பாராட்டிப்பேசியபின்னர் அவர்களுக்குநன்றிசெலுத்தி ஸ்ரீமதி கனகரத்னம் பேசினர்.

புதன்கிழமை பள்ளிக்கூடமாணவிகளுக்கு விடுதலை நாளாக்கப்பட்டது. (ந-நி)

# வகுப்புக்கலகத்துக்கு அடி கோலுவதற்குச் சதி

## கொழும்பு வாழ் கொழுத்த தமிழரின் கூடாத செயல்

### யு. என். பி.க்குப் பந்தம் பிடிப்பதற்காக சிங்களக் காடையர்களைக் கொண்டு தமிழரை நசுக்க ஏற்பாடு

சென்ற வாரம் வெளிவந்த போல்ஷிவிக் லெனினிஸ்டு கட்சிப் பத்திரிகையான 'ஜாதயக்கர சமசமாஜய" எழுதியிருக்கும் ஆசிரியத தலையங்கத்தின் தமிழாக்கம்:

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகர சபையில நிகழ்ந்த சம்பவத்தை இததேச மக்களினதும் குறிப்பாக தொழிலாளர் வர்க்கதினதும் விசேஷ கவனத்திற்கு பாத்திரமாகவேண்டும். அன்றைக்கு அக்கூட்டத்தை நடாத்த ஒழுங்கு செய்தவர்கள் கொழுத்திருக்கும் கொழும்புத் தமிழர்களே. சேனநாயக்காவின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஒப்புக் கொள்ளும் கோழைத் தமிழர்களின கூட்டமே அது.

இக்கூட்டத்தின் நோக்கங்களுக்கு எதிராகவுள்ள தமிழ் காங்கிரஸ அனுதாபிகளும் அன்று அவ்விடதிற்கு வந்து கூடினர்.

இந்தக் கூட்டம் தமிழ் சாதியத்தாரின் கூட்டமேயென்று தெளிவாக முன்கூட்டியே அறிவித்திருந்தபடியினல் அங்கே சிங்களவர்களுக்கு போக வேண்டிய அவசியமேதும் இல்லை. எனினும் நிகழ்ந்ததென்ன?

தமிழ் காங்கிரஸ அபிமானிகள் ஏராளமாக அக்கூட்டத்திற்கு வந்தபடியினல் சேனநாயக்காவின் மிகப்பெரிய தமிழ் பந்தக்காரர்களின் பாதுகாப்பிற்காகவே, இவர்களால் சிங்களவர்களை, சண்டியர்களாக உபயோகிக்க முயற்சிக்கப்பட்டது. அப்படியே இந்த ரகத்திலுள்ள சிங்களச் சண்டியர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். இது எவ்வளவு வெட்கக் கேடு அவர்களுக்கு.

அன்றைக்கு எதிர்பாராத விதமாக அடிதடி சண்டையும் குட்டிக் கலகமும் உண்டாகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால் தமிழர் சிங்களவர் சமூகச் சண்டை மூண்டு விடுவதற்கு நன்றாக இடமிருந்தது.

இது சம்பந்தமாக ஏதும் கவனமற்ற பயத்தை பொது மக்களிடையே உண்டாக்குவதற்கு எமக்கு எவ்வித அவசியமுமில்லை. எனினும ஏற்போகும் ஆபத்தை முன்கூட்டியே அறிந்துகொண்டால், தேச மக்கள் இவ் விஷயத்தில் எச்சரிக்கையாய் இருப்பதற்கு உதவியாய் இருக்கும். இன்று இந்நாட்டில் வசிக்கும் தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிரான பிரசாரதை மிகவும் ஏகடுபிடியாக சில சிங்கள-முஸ்லிம் அரசியல் வாதிகளால் நடத்தப்பட்டு வருவதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். இந் நிலைமையானது தொழிலாளர் வர்க்கத்திற்கும், பொது மக்களுக்கும் அதியவசிய மான ஜீவாதார உரிமைகளுக்காக, போராடும் வர்க்கப்போராட்டத்தின் முன்னணிக்கு தடையாய் இருக்கிறபடியால், இதற்குத் தகுந்த நடவடிக்கையை இப்பொழுதிருந்தே எடுத்துக்கொள்ளவேண்டியது நமது கடமை

வகுப்புவாதமானது, தொழிலாளர் வர்க்கதின் பயங்கரமான சதுருவென்பதை நாம் குறித்துக்கொள்ளவேண்டும். இதனல் தொழிலாளர் வர்க்கத்திற்கோ, ஏழை மக்களுக்கோ எவ்வித நன்மையும் ஏற்பட மாட்டாது. பயங்கரமான முதலாளித்வம் உலுத்துப்போய்க் கொண்டிருக்கும இக் காலத்தில, இந்தப் பணக்கார-முதலாளிக் கட்சியினர் தம்மை எப்படியேனும் காப்பாற்றிக் கொள்ள சூழ்ச்சியான உபாயங்களைச் செய்துவருகின்றனர். இதனல் தேச மக்களுக்கு உண்மையான சுதந்திரமும ஜீவனமும் ஏற்படப்போவதில்லை. எனவே இத் தேசத்தில் வாழும் பலதரப்பட்ட சமூகங்கள், இப்படியான சமயங்களில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகளப் பத்திரிகை எழுதுவது:

# பூரண சுதந்திர தீர்மானத்திற்குப் பயந்து ஓடிய திரு. சேனநாயக்கா

## தேச மக்கள் கருத்தையும் உலகின் போக்கையும் உதறிதள்ளும பண மூட்டைகளின் ஆதிக்கம்

## ஏகாதிபத்தியத்தின் கல்லறையில் சேர்ந்து அடக்கமாகும் காலம் நெருங்கிவிட்டது

"நவலோக்ய" என்னும் சஞ்சிகையின் நவம்பர் மாத இதழிலுள்ள ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

140 வருடங்களுக்குப் பின் சேனநாயக்கா குடும்பத்தாருக்கு கிடைத்திருக்கும் சுகபோக சுதந்திரத்திற்கு வருங்காலத்தில் இடதுசாரி இயக்கத்தால் நிச்சயமாக சாட்டை கிடைக்குமென்று, தாம் பயம்கொண்டிருப்பதாக சென்ற சில தினங்களுக்கு முன் மீரிகமத்தில் திரு சேனநாயக்கா பகிரங்கமாக கூறினர். இந்தப் பயம் சேனநாயக்காவுக்கு மட்டுமல்ல, அவரைப்போன்றஎல்லா பணக்காரகுடும்பங்களுக்கும்இந்தவெகுளி உண்டாகத்தான் செய்யும

இவ்வளவு காலமும் இத் தேசத்து சுயநலமிகளான பணக்கார குடும்பங்கள் காப்பாற்றி வந்தது சாம்ராஜ்யவாதிகளே! எனினும் இந்த பாவிஸட் எதிர்ப்புயுத்தத்தில், நேசதேசங்களுக்கு கிடைத்த வெற்றியினால் சாம்ராஜ்ய கோட்டையின் அத்திவாரம் தகர்ந்துகொண்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள். இதன் பிரதிபலனாக சாம்ராஜ்யவாதம் இன்றெல்லாம் செல்லுபடியாகாமற்போவதோடு, குடியேற்ற நாடுகளிலுள்ள மக்கள் சுதந்திர உணர்ச்சிபெற்று முன்னணி வகுத்துப் போராடவே, சாம்ராஜ்ய வாதிகளுக்கு இவ்வளவு காலமும் அடக்கிஒடுக்கி ஆண்டு வந்த குடியேற்ற நாடுகளை விட நேர்ந்திருக்கிறது. கிழக்காசிய நாடுகளின் சுதந்திர போராட்டக் கோலமும் பர்மா இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இலங்கையின் நிலைமையும் மாற்றமடைந்தது.

சேனநாயக்கா கும்பல்கள் எப்படித்தான் சாம்ராஜ்யவாதிகளை இலங்கையில் தங்கவைத்து, அவர்களின் ஆதரவில்-பாதுகாப்பில், தம் சுயலாபங்களைப் பார்த்துக்கொள்ள எண்ணியபோதிலும், சாம்ராஜ்ய வாதிகளுக்கு மேலும் இங்கே தம் கை வரிசையைக் காட்ட காலப்போக்கும் உலகத்தில் நிலையும் இடம்கொடாது என்பது திண்ணம். எனவே இந்நாட்டிலிருந்து சாம்ராஜ்ய வாதிகளுக்கு விருப்பமின்றியே வெளியேறுவதற்கான அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன

1942ல் கழனியில் நடந்த இலங்கை தேசிய காங்கிரஸ் வருடாந்தக் கூட்டத்தில் 'எமது திட்டமான கோரிக்கை இலங்கைக்கு பூரணசுதந்திரம் பெறுவதே' என்ற பிரேரணை நிறைவேறியதும்அச்சமயம் சேனநாயக்கா மூப்பனருக்குஎவ்வளவுகோபம் வந்ததென்பதை உடனே வெளியேறியதோடு காங்கிரலிலிருந்தும் ராஜினாமாச் செய்துவிட்டார். இதலிருந்து சேனநாயக்கா மூப்பனர் சுதந்திரம் பெறுவதின் நோக்கம் என்னவென்று அறிந்துகொள்ளுவதுஅவ்வளவு சிரமமல்ல. எதுவாயிருந்தாலும் பணக்கார வர்க்கத்துக்கு இதுவரையும் இருந்துவந்த ஏகபோகசுதந்திரத்திற்கு கடைசிக்காலம் வந்துகொண்டிருப்பதமட்டும் நிச்சயமல்ல

சாம்ராஜ்ய ஆட்சி முறையின் வீழ்ச்சி தான், இன்று இத் தேசத்து பணக்கார முதலாளி வர்க்கம் அரசாங்கத்தை கைப்பற்றுவதற்கு காரணமாக இருந்தது எனினும் ஏழை மகா ஜனங்களை என்றென்றும் அடக்கியொடுக்கி தலை தூக்க விடாமல் சென்ற நூற்றாண்டு காலமாக சுரண்டல் வெள்ளைக்காரர் பண்ணின வினையாடுடைத் தான் இன்று சேனநாயக்கா மூப்பனர் வேறு விதமாக ஆரம்பித்திருக்கிறார் என்ற போதிலும் காலப்போக்கில் முன்னேறிக்கொண்டிருக்கும் அறிவுள்ள மக்கள் இந்த பிற்போக்குச் சக்திகளுக்கு தாண்டவமாட இடம் கொடுத்துவிட்டு காதையும் கண்ணையும் மூடிக்கொண்டிருக்க மாட்டார்களென்பதை இன்னும் சிறிது காலத்தில் நம் முன் காணலாம்

வெள்ளை சாம்ராஜ்ய வாதிகள் துப்பாக்கி முனையைக் காட்டித்தான் இவ்வளவு காலமும் இத் தேச மக்களை அடக்கியாண்டுவந்தார்கள். இவ்வாட்சியின் பிரதிபலனாக அரசியல்-பொருளாதார-வர்த்தக - தொழில்-சமூகத்துறைகளில் இத் தீவகம் இன்னால்வெண்டாகிவிட்டது. நம் தேசத்தின் செல்வ நிலைமையே மண்ணோடு மண்ணுப்விட்டது; மக்களின் ஒற்றுமை குலைந்தது; பழம் பெருமை வாய்ந்த நமது குணகர்மம் இல்லாதொழிந்தது கடைசியாக எதுவும்போது மாக நடமாடும் மனிதபிராணிகளே எங்கும் காணப்படுகின்றனர். அரையில் துணியில்லை, வசிக்க வீடில்லை, படிப்போருஞ்யம், வயிற்றுப்பாட்டிற்கு கஞ்சியில்லை, அதற்கு உப்பிலலை உயிரைப் பிடித்துக்கொண்டு மரணத்தோடு போராட்டம் தான் கண்ட பலன்.

போனது போகட்டும் என்றெண்ணி, இனியாவது தேச மக்களின அபிவிருத்திக்கேற்ற தான நிர்மாணத் திட்டங்களை அமைப்பதற்குப் பதிலாக, தேச நிர்வாகத்தை கைப்பற்றியிருக்கும் சேனநாயக்கா அரசாங்கம் இப்பொழுது செய்வதென்ன? எல்லாம் வெளித் தோற்றத்தில் அழகு பொருந்திய போலித் திட்டங்களேயாகும்.

கடையாக, சேனநாயக்கா மூப்பனருக்கு வரப்போகும் ஆபத்தைப்பற்றி எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். தேச மக்களின் சம்மதத்தையும்-வாழ்வையும் லட்சியம் பண்ணுமல், உலகப் போக்கைக்கூட உணராமல், அவலத்தையும் பயங்கரமான யுத்தத்திலீடுபடுத்திய ஹிட்லர் முசோலினிக்கு ஏற்பட்ட கதி, எங்களுடைய சேனநாயக்கருக்கு ஏற்படாதென்று யாருக்குத்தான் சொல்ல முடியும்?

போலி வாத பேதங்களை ஒழித்து, பலதரப்பட்ட சமூக மக்கள் எல்லோருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் நல் வாழ்க்கையையும் முன்னிட்டு கையாளக்கூடிய திட்டங்களை தயாரித்து அமுல் நடத்துவதின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## சிகரட் ஏலத்தில் விலைப்படும்

### சுங்கஇலாகா வாரால்

கொழும்பு, டிச 8

சில நாட்களுக்கு முன் சில சோமாலிலந்து தேசத்து மாலுமிகள் கள்ளத்தனமாக 66,000 சிகரட்டை டின்களிலும், பக்கெட்டுகளிலும் பெட்டிகளிலும் கொழும்புக்குக் கொண்டு வரும்பொழுது சுங்க இலாகா உத்தியோகஸ்தர்களால் கண்டு பிடிக்கப்பட்டனர். சிகரட் முழுவதும் பறிமுதலாக்கப் பட்டன. இது நடந்தது சிகரட்டுக்குவரிகூட்டச்சிறிதுகாலத்துக்குமுன் இலைகளில் பல ரகங்கள் சேர்ந்திருக்கின்றன. இவை சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நாளை பின்னேரம் சுங்க இலாகாவின் சாமான்கள் வைக்குமிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## சிங்கக்கொடியே தேசியக் கொடியாம்

கொழும்பு டிச. 8

சிங்கக்கொடியையே தேசியக் கொடியாக்க வேண்டுமென்பதை வற்புறுத்த முகமாக நேற்றுமாலை கால்பேஸ் வெளியில் ஓர் பகிரங்கக்கூட்டம் கூடியது.

திரு ஏ. ஈ. குணசிங்கா தலைமை வகித்தார்.

திரு சீ, டபிள்யு. டபிள்யு கன்னங்கரா, கே. டி. சுகததாச முதலிய பலர் பேசினார்கள்.

## ஹிந்துக்களிடையே ஜாதிபேதங்கள்

### ஒழிப்பதற்குக் கலப்பு மணச்சட்டம்

புதுடில்லி, டிச 8

ஹிந்துக்களிடையே ஜாதிபேதத்தை தொல்லைகள் மலிந்திருப்பதால் அவைகளை ஒழிக்க பல ஜாதியினருக்கிடையே கலப்பு மணங்கள் நடைபெற ஊக்கமளிக்கும் பொருட்டு திரு மோஹன்லால் லிக்வானு இந்தியா பாராளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். அம்மசோதாவின் நோக்கங்கள் பின்வருமாறு:-

பூர்வீக ஹிந்துசாஸ்திரங்களை ஆதாரங்காட்டி வியாக்கியானம் செய்வதால் ஹிந்துக்களுள் பல ஜாதிகளுக்குள் நடைபெறும் கலப்பு மணங்கள் பல ஹிந்துச் சட்டப்படி செல்லத்தகாதவைகளாக்கப்படுகின்றன இதனால்வெவ்வேறுஜாதிகளைச் சேர்ந்தவர்களும் பொருத்தமும் யோக்கியதை யுடையவர்களுமான ஆணும் பெண்ணும் கலியாணம் செய்துகொண்டு வாழமுடியாத நிலைமை இருந்துவருகிறது. இன்னும் ஒரேஜாதிக்குள்ளாகவே கலியாணங்கள் பரம்பரையாகநடந்துகொண்டு வருவதால் ஜாதிப் பிரிவுகளும் துவேஷங்களும் செழிப்பான ரத்த சக்து இன்மையும் அதிகரித்து ஹிந்து சமூகத்தில் ஒற்றுமைக் குறைவும் பலக்குறைவும் ஏற்பட்டு வருகிறது.

ஆகவே வெவ்வேறு ஜாதிகளைச்சேர்ந்த ஆண்களுந்பெண்களும்மதாச்சாரப்படிகலியாணம் செய்துகொள்ள இந்தமசோதா அனுமதியளிக்கிறது. அதோடு இம்மசோதா சில சமூக சீர்திருத்த விதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. கலியாணவயதை நிர்ணயித்திருக்கிறது. கலியாணங்களை அரசாங்கப் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டுமென்று விதி ஏற்படுத்தியிருக்கிறது. டல தராமணத்தையும் தடைசெய்திருக்கிறது. ஒரே ஜாதிக்குள் கலியாணம் செய்துகொள்கிறவர்களும் இம்மசோதாவின்படி மேற்கூறிய விதிகளைக் கடைப்பிடிக்கலாம்.

## 'சைப்பிரஸை சுயாட்சி நாடாக்குக!"

### இல்கியேல் வேலைநிறுத்தமாம்

### தொழிலாளர் வேண்டுகோள்

நிக்கோஸியா, சைப்பிரஸ் டிச 7

அகில சைப்பிரஸ் தொழிலாளர் சங்கம் ஒரு மகாநாடு கூடித் தங்களுக்கும் இலங்கைக்குக் கொடுத்ததுபோல பிரிததானிய ஆதிக்கத்தின் கீழ் சுயாட்சி உரிமை வேண்டுமெனக்கோரிக் கடியேற்ற நாட்டு மந்திரியாகிய திரு ஜிரீச் ஜோன்ஸ் அவர்களுக்குத் தந்தியடித்திருக்கிறார்கள், அப்படிக்கொடுக்க மறுத்தால் 48 மணி நேரத்தில் வேலை நிறுத்தம் செய்வதாகவும் பய முறுத்தியிருக்கிறார்களாம்.

## விறகு விற்பவர்கள் போட்டி

### இரகசிய போலிஸ் ஏற்பாடு

கொழும்பு, டிச. 8

கொழும்பில் விறகு அந்தர் ஒன்று ரூ. 1-65 க்கும் ரூ. 2-00 க்கும் இடையில் பல வகைகளிலும் விலைப்படுகிறது. ரூ 2-00 ஆக விற்பவர்கள் குறைய விற்பவர்களை அந்த விலைக்கு விறகாமல் தங்கள் விலைக்கு விற்கும்படியோ அல்லது வியாபாரத்தையே விட்டு விடும்படியோ அவர்களை பயமுறுத்தி நிர்ப்பந்தப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் கொழும்பிலே நாளொன்றுக்கு விலைப்படுகிற 10,000 அந்தர் விறகிலும் அந்தர் ஒன்றுக்கு 35 சதவீதப்படி விறகு விற்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ஒரு லக்ஷ ரூபாவுக்கு மேல் லாபமுண்டாகிய விலைக்கு விற்க ஏதுவாக உரிமையை ஈட்ட முயல்பவரே மற்றவர்களுக்கு இந்த பயமுறுத்தல்களை வினியோகிக்கிறாராம்.

இதற்காக குறைந்த விலையில் விற்பவர்கள் போலிசாரின் பாதுகாப்புக் கோரியதன் பேரில் பயமுறுத்துபவர்களைக் கவனிக்க இரகசியப் போலிசார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## 60 கோடி டாலர்

### பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கடன் கொடுக்கிறது

### பொது ஜனங்கள் எதிர்ப்பு

லாகூர், டிச. 7

அமெரிக்காவிடமிருந்து 60 கோடி டாலர் பாகிஸ்தான் கடன் வாங்கப் போவதை ஆட்சேபித்து இன்றிரவு இங்குள்ள சட்டக் கல்லூரி மண்டபத்தில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாலிக் பிரோஸ்கான்நூன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அமெரிக்க மூலவிமர்சகர்கள் தலைவரான மீர்சா பாஜிதனின் முகமது அகமது அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் கடன் வாங்குவதை பலமாகக் கண்டித்துப் பேசினர்.

## பர்மாவில் 'போட்டி சர்க்கார்' செய்தி

### கட்டுக் கதை என்கிறார் கம்யூனிஸ்ட் தலைவர்

ரங்கூன், டிச. 7

மத்திய பர்மாவில மூன்று ஜில்லாக்களில் கம்யூனிஸ்டுகள் போட்டி சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தி முழுதும் கட்டுக் கதையென்றும் இதேபோன்று முன்னொரு தடவை புரளி கிளம்பி துருப்புகள் பாய்ந்தபோது எல்லாம் பொய்யென்று கண்டு துருப்புகள் திரும்பின என்றும் பர்மா கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி தக்கின்தான் தெரிவிக்கிறார்.

### பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள்

பர்மா மந்திரிகளின் கொலை சம்பவத்திற்கு முன்பு ராணுவ டிப்போவிலிருந்தும் போலிஸ் டிப்போவிலிருந்தும் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் களவாடியதாக மூன்று பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் மீதும் மற்றும் சிலர் மீதும் குற்றஞ்சாட்டி பிரத்தியேகமாகத் தொடரப்பட்டுள்ள வழக்கு ஜனவரி மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இப்பொழுது விசாரணை பெற்று வரும் பர்மா மந்திரிகள் கொலை வழக்கில் எதிரிதரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்படவிருக்கும் யுத்தகால பர்மா பிரதமராக இருந்த டாக்டர் பாமா மீதும் மாஜி மந்திரி தக்கின் பாசின் மீதும் பர்மா சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்டுள்ள வழக்கும் ஜனவரி மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மொத்தம் 100 பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. [ராய்ட்டர்]

## இந்தோசைனு சமரசப் பேச்சு

பாரிஸ், டிச. 7

இந்தோசைனுவின் எதிர்காலம்பற்றி பொங்கின் கடற்கரையில பிரஞ்சு யுத்தக் கப்பலில் பிரஞ்சு ஹைகமிஷனரும் அன்னாமமாஜி மன்னரும் இன்னும் சந்தித்துப் பேசினார்களாம். அன்னாம் மாஜி மன்னர் பாவோடாய் இரு வருடங்களுக்கு முன் ராஜபதத்தை இழந்து ஹாங்காங்கிலவசித்துவருகிறார் வியட்நாம் [இந்தோசைனை குடியரசு] குடியரசுக்கும் பிரஞ்சு அரசுப்புகளுக்கும் ஒரு வருட காலமாக நடைபெற்று வரும் போராட்டத்தை நிறுத்த சமரசம் பேசும்படி தான் கேட்டுக்கொள்ளப்பட்டதால் பாவோடாய் பிரஞ்சு ஹைகமிஷனர் எமில் போல்வாட்டை சந்தித்துப் பேசினார்.

பேச்சுகள் முடிந்ததும் அன்னாம் மாஜி மன்னர் பாவோடாய் ஹாங்காங்கிற்குத் திரும்பிச் சென்றார்.

பிரஞ்சு ஹைகமிஷனர் சைகோனுக்குத் திரும்பினார். அவர் நாளை பாரிலுக்குப் பயணமாகிறார். [ராய்ட்டர்]

## இலங்கை வங்கியின் பங்காளர் கூட்டம்

### தலைவர் குறிப்புரை

கொழும்பு, டிச. 8

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து கிடைத்தவுடன் இலங்கை வங்கி தேசத்தின் பொருளாதார நிலையையும் ஒட்டி கடமையாற்ற கோரிடுமென்றும் அப்படி கூடிய கடமைகளை காரணமாகச் சமாளிக்க முடியுமென்றும் இலங்கை வங்கியின பங்காளரின் ஒன்பதாவது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த சர் ஏனெஸ்ட் டி சில்வா கூறினர்.

தொடர்ந்து அவர் கூறியது:-

வங்கியின் வேலையும் லாபமும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் குறிப்பாக வெளிநாடுகளுடன் வேலை செய்யும் பகுதி நன்றும் முன்னேறியிருப்பதாகவும் பாராட்டினார். இந்த முன்னேற்றத்திற்கு இவ்வருட லாபமே அறிகுறியாகுமென்றும் இவ் வருட லாப விகிதத்தைப் போல் இவ்வளவு காலமும் இல்லையென்றும் கூறினர்.

உலகயுத்ததிற்குப் பின்னர் அவசியப்பட்ட நாடுகளில் இடர்களை நீக்க பல திட்டங்கள் வகுத்து முன்னேறியபாடில்லை. கட்டுப்பாடும் தடையுமில்லாமல் உலக வியாபாரம் செய்யவும் சீக்கிரத்தில் முடியாது. கட்டுப்பாடுகள் நீங்கினாலும் எல்லா நாடுகளும் ஒரே சீரில் இல்லாமல் பொருளாதார நிலையும் பொருள் உற்பத்தியும் பல்வேறு படிகளிலிருப்பதால் ஒரு நாடு மற்ற நாடுகளோடு இஷ்டப்படி வியாபாரம் செய்ய முடியாமலிருக்கிறது என்றும் கூறினர்.

பின் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி மார்ஷலின திட்டத்தைக் குறித்துப் பேசும்பொழுது அதை உலகம் ஏற்றால் அமெரிக்காவுக்கும் உலகத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையாகவிருக்குமென்றும் இதை ஏற்பதாலடையக்கூடிய பிற பேறுகளை மறு வருடத்துக்குள் தாங்கள் கண்டானாய்க்க ஆசையுடையவராயிருப்பதாகவும் கூறினர்.

இலங்கையைக் குறித்துப் பேசுபொழுது உடைகளுக்கும் சில உணவுப் பொருட்களுக்கும் நெருக்கடியேற்பட்ட தீயலாமல் மற்றும் விஷயங்களில் இலங்கை மற்றைய தேசங்களை விட அதிஷ்டமுடையதென்றும் இதேபோல் இனனும் சில காலம் இருக்க கோரிடுமென்றும் எங்கள் ஏற்றுமதிக்குத் தக்கவாறே இறக்குமதியும் இருக்குமென்றும் கூறினர்.

இப்போதேயிலைக்கும் கொப்பருவுக்கும் கொடுக்கப்படும் விலை நிர்ணயமானவையென்றும் ஆனால் ரப்பர் ஏற்றுமதி குறைந்ததால் ரப்பர் வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறி இப்போ ரப்பர் விலையும் ஏறுவதால் இன்னும் விலை படிப்படியாகயேறி ரப்பர் தொழிலாளரடைய முயற்சிக்கதக்க பலன் கிடைக்கவேண்டுமென நம்புவதாகவும் கூறினர். அடுத்து வரும் 3 வருடங்களுக்கும் தேயிலையும் கொப்பருவும் நெருக்கடிக்குளாகாவென்றும் ஆனால் அதன் பிறகு அவைகளுக்கு ஏற்படும் நிலையை ஏற்கெனவே கூறமுடியாமலிருப்பதாகவும் கூறினர்.

## ரோமாபுரியில் செங் கொடி ஊர்வலம்

### 11 நாடுகளிலிருந்து கம்யூனிஸ்டுகள் திரண்டு வந்தனர்

ரோமாபுரி, டிச, 7

இன்று ரோமாபுரியில் 50,000 கம்யூனிஸ்டுகளின் ஊர்வலம் நகர வீதிகள் வழியாக ஆர்ப்பாட்டங்களுடன் சென்றது. செங் கொடிகள் பறந்தன. இந்த ஆர்ப்பாட்டம் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப் பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள சென்ற இருநினங்களாகலெ நீரிலை பிரான்ஸ, ஹாலந்து, ரஷ்யா யூகோஸ்லவியா, செக்கோஸ்லவகியா, ஹங்கேரி, டென்மார்க், ஆஸ்திரேலியா, லக்சம்பர்க், ஸ்பெயின், இத்தாலி முதலிய 11 நாடுகளிலிருந்து ஏராளமான கம்யூனிஸ்டுகள் வந்த வண்ணமிருந்தனர். ராணுவ முறையில் அணிவகுப்புகளும. வணக்கங்களும், ஆர்ப்பாட்டங்களும நடைபெற்றன. (ராய்ட்டர்)

# சுதந்திர லங்காவை சுதந்திர பாரதம் அங்கீகரித்தது

## இந்திய சர்க்கார் பிரதிநிதி ஹைகமிஷனராகினார்

## சுதந்திர இந்தியாவின் யுத்தக் கப்பல் "கோதாவரி" கொழும்பு விஜயம்

கொழும்பு, டிச. 8

அந்திய நாட்டு விவகார மந்திரி காரியாலயத்தார், பத்திரிகைகளுக்கு கீழ்க்கண்ட அறிக்கை விடுத்திருகின்றனர்:-

இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கலந்து ஆலோசனை செய்து, இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி பதவியை 1947 டிசம்பர் 8-ம் தேதி முதல் இந்திய ஹைகமிஷனர் பதவியாக ஆக்கியிருக்கிறார்கள்.

அதேபோன்று, இலங்கை சுதந்திர மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டபிறகு, இலங்கை அரசாங்கம் இந்தியாவிலுள்ள தனது பிரதிநிதி பதவியை ஹைகமிஷனர் பதவியாக ஆக்குமென்று இந்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

### நிருபர்கள் மகாநாடு

இன்று காலை உள்நாட்டு மந்திரி காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகா நிருபர்கள் மகாநாட்டில் உள்நாட்டு மந்திரி ஸர் ஒலிவர் குணத்திலகா பின்வருமாறு தெரிவித்தார்:

இந்திய அரசாங்கம் இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி வி கிரியை 1947 டிசம்பர் 8-ந் தேதிமுதல் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் பதவியாக ஆக்கியிருக்கிறார்கள்.

அதேபோன்று, இலங்கை சுதந்திர மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டபிறகு, இலங்கை அரசாங்கம் இந்தியாவிலுள்ள தனது பிரதிநிதி பதவியை ஹைகமிஷனர் பதவியாக ஆக்குமென்று இந்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

திரு வி. வி. கிரி பொது ஜன சேவையில் ஈடுபட்டிருந்த பிரமுகர். பாரிஸ்டர். சென்னை சட்ட சபை அங்கத்தினராக இருந்தவர். சமீபத்தில் சென்னை அரசாங்கத்தின் தொழில் மந்திரியாக இருந்தவர். பொது ஜன வாழ்க்கையில் பிரபல்யம் வாய்ந்தவர். பல வருடங்களாக அவர் தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் காரியதரிசியாகவும் தலைவராகவு மிருந்தார். அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸின் தலைவராக இரு நடவை பதவி வகித்திருந்திருந்தார். 1926ல் நடைபெற்ற ஜினிவா சர்வ தேசத் தொழிலாளர் மகாநாட்டுக்கு இந்திய தொழிலாளர் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். பல வருடங்கள் இந்தியாவின் மத்திய சட்ட சபை அங்கத்தினராக இருந்து சென்னை சட்டசபைக்கு தேர்தலுக்கு நிற்பதாக அறிவித்து விலகி போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1937-39ல் சென்னை மந்திரி சபையில், தொழில் கைத்தொழில், கூட்டுறவு மந்திரியாகப் பதவி வகித்தார். 1946-வது வருடத்தில் அவர் மந்திரி சபையில் மீண்டும் தொழில் மந்திரியாக இருந்தார்.

இலங்கையின் சுதந்திரத்தை அங்கீகரித்திருப்பதில் இந்தியா முதலாவது நாடானபடியால் இந்திய அரசாங்கத்தின் இச் செயலைக் கண்டு இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது. இலங்கை சுதந்திரத்தை தயக்கமோ தாமதமோ இன்றி ஆதரித்தது திரு வி. வி. கிரியை இந்தியாவின் முதல் ஹைகமிஷனராக நியமித்திருப்பதாகவும் இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா இந்திய பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு மிகவும் நன்றியறிதலுள்ளவராக இருக்கிறார்.

திரு வி. வி. கிரி ஏற்கனவே இலங்கையிலுள்ள எல்லா வகுப்பினரின் அபிமானத்தையும் பெற்றுள்ளார். அவர் எதிர்காலத்தில் இந்தியாவையும் இலங்கையையும் ஒன்றுக்கொன்று நெருங்கி உறவுகொள்ளுபடி செய்வார் என்று இலங்கை அரசாங்கம் அவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறது

பண்டித நேரு செய்துள்ள இந்த நிர்மானம் டில்லியில் நடைபெறவிருக்கும் இலங்கை-இந்திய சமரசப் பேச்சுக்கு ஒரு சுபசூசகமான செயலென்று இலங்கை பிரதம மந்திரி கருதுகிறார்.

கூடிய சீக்கிரம் ஆஸ்திரேலியாவும் இலங்கையிலுள்ள தனது பிரதிநிதி பதவியை ஹைகமிஷனர்பதவியாகமாற்றுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் காரியாலயத்தை நிறுவ முன்கூட்டியே பிரிட்டனிலிருந்து ஒரு கோஷ்டி இன்று வந்து ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

நமது பிரதிநிதிகளை எந்தெந்த நாடுகளில் நியமிப்பது என்பதுபற்றி இலங்கை அரசாங்கம் இன்னும் ஓர் முடிவுக்கு வரவில்லை.

கூடிய சீக்கிரம் இது விஷயமாக ஆலோசித்து முடிவு செய்யப்படும்

பல நாடுகளிலிருந்தும் இலங்கையில் நியமிக்கப்படும் ஸ்தானிகர்கள் வசிப்பதற்கு இடவசதி ஏற்படுத்துவதுபற்றி விவசாய மந்திரி நடவடிக்கை எடுத்துவருகிறார்.

அமெரிக்கா தனது ஸ்தானிகத்தை நிறுவுவதற்கு இடம் வேண்டுமென்று கோரி பல வாரங்களுக்கு முன்பே இலங்கை அரசாங்கத்துக்கு மனுச் செய்துகொண்டிருக்கிறது. அமெரிக்கா தனது ஸ்தானிகாலயத்தை நிறுவுவதற்கு கட்டிடங்கள் கட்ட கூடிய சீக்கிரம் அனுமதி அளிக்கப்படும் இவ்விதம் சொந்தமாக இலங்கையில் இடம் வாங்கி ஸ்தானிகாலயம் கட்டும் நாடுகளில் அமெரிக்கா முதலாவதானதாகும்.

எல்லா நாடுகளின் ஸ்தானிகாலயங்களும் கொழும்பில் ஒரு பகுதியில் இருப்பதற்கு கட்டிடங்கள் கட்டுவது சம்பந்தமாக விவசாய மந்திரி திட்டம் போட்டு ஆலோசனை செய்துவருகிறார்.

### இந்தியாவின் யுத்தக் கப்பல்

கொழும்பு, டிச 8

சுதந்திர இந்தியாவின் யுத்தக்கப்பல் "கோதாவரி" நேற்று கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தது

## வவுனியாவுக்கு பொது ஸ்தாபனங்கள் தேவை

வவுனியா, டிச 6

வவுனியாவிலுள்ள வர்கள் பலர் உதவி ஏஜண்ட் திரு. ஏ. எஸ். கோபான் விக்கிரம அவர்களின் தலைமையில் கச்சேரியில் பகிரங்கக் கூட்டமொன்று கூடித தங்களுக்கு வேண்டிய பலவற்றை யோசித்தனர்.

நகர சுவுன்சில் தலைவர் திரு. பி. தர்மலிங்கம் உட்பட 17 பேர்கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, "ஜெயரத்ன பார்க்" என்னும் விளையாட்டுத்திடலில் ஒரு இளைப்பாறும் மண்டபம் அமைக்கவும், அண்மையிலுள்ள கிராமத்தார் வசதிகள் தங்கமடங்கள் கட்டவும், புகையிரத ஸ்தானத்தின் பிளாட்பாரமை நீட்டியமைக்கவும், பிரயாணிகளுக்கு வவுனியாவிலே போகவரத்து வசதிகளைக்கவும், மின்சார தண்ணீர் சப்ளை வசதிகளையும் கவனிக்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டனர்.

## நேந்தாஜி வாசிகசாலை

கார்த்திகை மாதம் 20-ம் தேதி வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணை நேதாஜி வாசிகசாலைக்குரியமுன்னேற்றத்தைப் பற்றி திரு கணபதிப்பிள்ளை அவர்கள தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் நிருவாளர்கள் திரு கே. கே. நாகலிங்கம் வாசிகசாலைக்குரிய விஷயங்களைப் பற்றியும் சமூக முன்னேற்றத்தைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர் அதன் பின் திரு ச. ராசையா திரு க. சின்னராசு ஆகியோர் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு நகரசபை உபதேர்தல்

### திரு. பீட்டர் கெனமன் ஆதரித்து பொதுக்கூட்டம்

கொழும்பு, டிச. 6

கொழும்பு நகர சபையில் கொட்டாஞ்சேனை மேற்கு வட்டாரகத்திற்கு அங்கத்தினராக இருந்த திரு தூர்ஸ் ஆர். டி. சில்வா நிரந்தர்யின் காரிய தரிசியாக நியமிக்கப்பட்டிருப்பதால் நகரசபை அங்கத்தினர் ஸ்தானம் காலியாக இருக்கிறது. அதற்கு வேறொரு அங்கத்தினர் தெரிந்தெடுக்க உபதேர்தல் நடைபெறும். இந்த ஸ்தானகதிற்கு போட்டியிடும் பாராளுமன்ற அங்கத்தினரான திரு பீட்டர் கெனமன் ஆதரிக்க நேற்றுமாலை கொட்டாஞ்சேனை ரோகலே அவன்யூவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது வீடுவரி செலுத்தாதோர் சங்கக் காரியதர்சி திரு இ. எம். எட்வின் டி. சில்வா தலைமை வகித்துப் பேசிய போது, வீடு வாடகை செலுத்தி குடியிருப்பவர்கள் வசிக்கும் வீடுகளை வகிப்பதற்கு யோக்கியதையிலாதிருக்கின்றனவென்றும் நகர சபையில் அங்கத்தவராக இருப்பவர்களில் பெரும்பாலோர் வீடுகளின் சொந்தக்காரர்களாக இருகின்றார்களென்றும், திரு கெனமனைப் பேராதரவர்களுக்குத் தெரிந்தெடுத்தால், குடியிருப்பு வசதிகளுள்ள வீடுகளை நகரசபை கட்ட முயற்சி எடுத்துக் கொள்வார் என்றும் தெரிவித்தார். பாராளுமன்ற அங்கத்தினர்களான திரு. எச். அபேகுணவர்தனவும், திரு பீ. தேவலாவும் உரையாற்றியும் திரு கெனமனைத் தெரிந்தெடுப்பதால் ஏற்படும் நன்மைகளைக் குறித்துப் பேசினார்கள்.

டாக்டர் எஸ். விக்ரமசிங்கா பேசிய போது, பிரதம மந்திரி பாராளுமன்றத் தலைவர் இவர்கள் குடியிருக்க லட்சக்கணக்கான பொதுப்பணச் செலவில் மாளிகைகள் புதுப்பிக்கப்படுகின்றனவென்றும் ஆனால், ஏழை மக்கள் குடியிருக்க வசதியில்லாதிருந்து திண்டாடுகின்றனரென்றும் கூறினார்.

முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைந்தது.

## ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யாதே!

### அமெரிக்கப் பிரதிநிதி கோரிக்கை

வாஷிங்டன், டிச. 6

அமெரிக்காவிலிருந்து ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் மீதும் தடை விதிக்கப்பட வேண்டுமென்று அமெரிக்கப் பிரதிநிதி சபையின் ஒதியோ அங்கத்தினர் திரு டெய்கல் தெரிவித்தார் இவர் பிரதிநிதி சபையில் வர்த்தக கமிட்டித் தலைவர் அமெரிக்காவில் கட்டப்பட்ட கப்பல்களை ரஷியா உபயோகிக்கிறதென்ற தகவல்பற்றி இப்பொழுது இக்கமிட்டி பரிசீலனை செய்து வருகிறது அமெரிக்காவிலிருந்து விவசாயக் கருவிகளும், கைத்தொழில் இயந்திரங்களும் ஏராளமாக ரஷியாவுக்குச் செல்வதாக இக்கமிட்டி கண்டு பிடித்திருக்கிறது. ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவாதடுக்க நாம் கோடிக்கணக்கான டாலர் உதவி அதே சமயத்தில் ஏராளமான பொருட்களை ரஷியாவுக்கு அனுப்புவது சரியல்ல என்று திரு. டெய்கல் தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

## சர். ஸி. பி. டில்லி வந்து சேர்ந்தார்

### காந்திஜியை சந்திக்கிறார்

புதுடில்லி, டிச 6

சர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் இன்று இங்கு வந்து சேர்ந்தார். அவர் சர்தார் பட்டேலுடன் தாமதிக்க வருகிறார். அவர் நாளை மகாத்மா காந்தியைச் சந்திப்பார். அவர் உடனடியாக உதகைக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விக்டோரியா மகாராணி வசித்த மாளிகை

### திருடர்கள் புகுந்து களவாடினர்

மகாவலை, டிச 6

விக்டோரியா மகாராணி வசித்துவந்ததான மோரிஸ மாளிகையில் நேற்றிரவு இரு திருடர்கள் புகுந்து அங்கிருந்த இரு பெண்களின் கை விரல்களிலிருந்த மோதிரங்களைக் களவாடிச் சென்றனர். திருடர்கள் வாசல் கதவைத் தட்டிய போது மாளிகையிலிருந்த ஸ்ரீமதி ஒலோரன்ஸ் பிக்பெக்கும் அவரது சகோதரியும் வாசலுக்குச் சென்று கதவைத் திறந்தனர். உடனே திருடர்கள் அவ்விரு பெண்களையும் கீழே தள்ளிப் பலமுறுத்தி பெட்டிச் சாவிகளைக் கேட்டனர் சாவிகளை கொடுத்தபின் பெட்டிகளைத் திறந்து 100 பவுண்களையும், அப்பெண்கள் அணிந்திருந்த மோதிரங்களையும் அபகரித்துச் சென்றனர். டெலிபோன் கம்பிகளை வெட்டினர் (ராய்ட்டர்)

## ஈ சாவின் வழக்கறிஞர்

### எதிரியை விடுதலையாக்குவாராம்

ரங்கூன், டிச. 6

சென்ற ஆடி மாதம் பர்மா சட்டசபையின் பிரதம மந்திரி யூ. நசான் உட்பட எழுவரை கொன்ற வழக்கில் முதல் எதிரி ஈ சாவின் வழக்கறிஞர் இன்று இங்கு வந்து சேர்ந்தார். இவ்வழக்கில் ஈ சாவை விடுதலை செய்விக்க முடியுமென்று திடமாக கூறினார். அவர் இன்னும் தனது கட்சிக்காரரைச் சந்திக்கவில்லை. நாளை சந்திப்பார்.

## பிரான்ஸ அமெரிக்காவின் காலனி

### கம்யூனிஸ்டுகள் கருத்து

பாரிஸ், டிச. 6

"பாரிஸில் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் புரட்சிகள் அடக்கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் தொழிலாளர் வேலைக்குத் திரும்புகின்றனர்" என்று உள்நாட்டு மந்திரி தெரிவித்தார். அமெரிக்க அந்நியநாட்டு மந்திரியின் விசேஷ ஆலோசனை அதிகாரி டாலஸ் பிரான்ஸில் கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு அரசியல் கட்சியாக தான் கருதவில்லையென்று அறிவித்ததைப்பற்றி நேற்றிரவு பிரெஞ்சு பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் கண்டித்துப் பேசினர். அமெரிக்கர் பிரான்ஸின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறார்களென்றும் பிரான்ஸை அமெரிக்காவின் குடியேற்ற நாடாகிவிட்டதென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ராய்ட்டர்)

## கம்யூனிஸ்டுகள் முன்னேறுகின்றனர்

### சீனா உள்நாட்டு யுத்தம்

ஷாங்கை, டிச. 6

தெற்கு ஹோனான் மாகாணத்தில் பெரும் போர் நடைபெறுகிறது. பீப்பிங்-ஷாங்ஹை ரயில் பாதையில் இன்று ஜெனரல் லியு போ செங் தலைமையில் 50,000 கம்யூனிஸ்ட் தருடர்கள் முன்னேறுகின்றனர். வடமேற்கு ஷாங்குங் மாகாணத்தில் நேற்றிரவு கம்யூனிஸ்ட் துருப்புகள் பெரிய செப்தளமாகவிருந்து 50 மைல் தூரத்திலுள்ள வெய்யாங் நகரை தாக்கினர் [ராய்ட்டர்]

## பர்மாவில அரசாங்க உத்தியோகங்கள்

### சுதந்திரம் பெற்றபின் பர்மியர்கள் விலகமுடியாது

ரங்கூன், டிச 6

ஜனவரி 4-ம் தேதி பர்மா சுதந்திரம் அடைந்ததும் அரசாங்கதிலுள்ள பர்மிய உத்தியோகஸ்தர்கள் விலகுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் சட்டசபையின் விசேஷக் கமிட்டி இவ்வித முடிவு செய்திருக்கிறது. இந்தியாவுக்குச் சென்றுள்ள பர்மா பிரதமர் தக்கின் நு திரும்பி வந்தபின் பர்மா அரசாங்க உத்தியோகஸ்தர்கள்பற்றி கமிட்டி செய்துள்ள சிபார்சுகளை அங்கீகரிப்பார். பர்மா அரசாங்கத்தில் பர்மிய ரல்லாதார் பெரும்பாலான உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். இந்தியர்களில் சிலர் புதிய நிபந்தனைகளின் பேரில் மீண்டும் நியமிக்கப்படுவார்கள். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பலர் ஏற்கனவே விலகிச் சென்று விட்டார்கள் இன்னும் சிலர் கூடிய சீக்கிரம் விலகிப் போவார்கள். (ராய்ட்டர்)

## ஜப்பான் யுத்தக் கைதி

### டச்சு போர்னியோவில் மரணதண்டனை நிறைவேறியது

பட்டேவியா, டிச 6

ஜப்பான் யுத்தக் கைதியான ஜப்பானிய கடற்படை உதவித் தளபதியான டாடா ஷிச் மீது விசிக்கப்பட்ட மரண தண்டனை இன்று டச்சு மேற்கு போர்னியோவில் போன்டியானாக் என்னுமிடத்தில் நிறைவேற்றப்பட்டது. ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது சுமார் 14000 ஜனங்களைக் கொலை புரியும்படி அவர் கட்டளையிட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

[ராய்ட்டர்]

## 10 லட்சம் மார்க் மதிப்புள்ள சித்திரங்கள்

### ஜெர்மனியில் மோசக் களவு

மூனிச, டிச. 6

பிரபல சித்திரக்காரர்களால் வரைந்திருந்த பழங்காலத்திய சித்திரங்களை அமெரிக்க போலீஸ் உடையில் வந்த சிலர் அபகரித்துச் சென்றனர். அச் சித்திரங்கள் யுத்தகதிற்கு முன்பு 10 லட்சம் மார்க் விலை மதிப்புடையதாக இருந்தன அவைகளை வைத்திருந்த சித்திரக்காரர்வீட்டுக்கு மோசடிக்காரர்கள் வந்து அமெரிக்க ராணுவ சார்கார் அச் சித்திரங்களை எடுத்துவர தாகச் சொல்லி அபகரித்துச் சென்றனர். [ராய்ட்டர்]

## பகிடியை பாம்பு கடித்தது

மாட்ரிட், டிச. 6

செகுண்டோ ஜிமோனா என்னும் மேசன் ஒருவன் ஓய்வுமைக்கு முன் ஒரு சிறுபையன மீது கலொன்றை வீசினபோது பாட்டாக எறிந்து அப்பையன் இறந்து விட்டான், இதைப் பற்றி ஊரில் யோசித்துக் கொண்டேயிருந்தபடியால் இரவு தூங்கச் சென்றபோது 'எமதூதன்' என்று தோன்றியதுடன் 'எமதூதனே' விருபி ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும் என அறிவித்தார்" என்றும், ஒப்பம் 'எதல இலங்கைவாழ் வடமாகாண வியாபாரிகள்" என்றும் மிருந்தது. ஆதலால் இது ஒரு சூழ்ச்சி நலம் விரும்பி வெளியிட்டவர்கள் பரமென்றே அனுமானம் கொள்ளவேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ்ச் சாதியாரின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிமிஷத்தில், தமிழர்களுக்கு ஒற்றுமை தேவை என்பதை வலியுறுத்துவதாலும், சுயநலத்தை விரும்புகிறவர் எவரும் உண்மைத் தமிழர் ஆகமாட்டார்கள். தமிழ் சாதியாருக்கு பெரும் நன்மை விளைக்கக்கூடிய ஒரு விஷயம் வரக்கூடுமாயின், அதற்காக தமிழரில் ஒரு குறைந்த சத விகிதத்தார் எவ்வளவு தியாகம் செய்தாலும் நலமல்லவா? சரித்திரம் அவர்களைப் போற்றும், பின் சந்ததியாரும் வாழ்த்துவார்கள்.

இங்ஙனம்
வடமாகாண வாசி.

1-12-47.

## சீன - அமெரிக்க கடற்படைஒப்பந்தம்

நாங்கிங், டிச. 5

சீன அரசாங்கத்தை ஆதரிக்கும் பத்திரிகைகள், சீனாவும், அமெரிக்காவும் கூடிய சீக்கிரம் கடற்படை ஒப்பந்தம் செய்துகொள்ளுமென்று தெரிவிக்கின்றன. அந்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா சீனாவுக்கு யுத்தக் கப்பல்களைக் கொடுத்தல் உதவும் சீனக் கடற்படை வீரர்களுக்கு அமெரிக்கா பயிற்சியளிக்கும் உத்தியோக தோரணையில் இங்குள்ள அமெரிக்க ஸ்தானாதிபதியிடமிருந்தோ அல்லது சீன கடற்படை அதிகாரிகளிடமிருந்தோ எவ்விதக் தகவலும் அறிந்துகொள்ளமுடியவில்லை

(ராய்ட்டர்)

## ஆசிரியருக்குக கடிதங்கள்

### மட்டக்களப்பு தமிழர் அடிமைகளாயிருந்தனரா?

ஐயா,

29-11-47 ல் நடந்த பாராளுமன்றத்தில் மட்டக்களப்புத் தமிழர் சிங்களவருக்கு அடிமைகளாகவே இருந்தனர். எனப் பறையடைந்த வாயாடிப் பிரமுகர் இலங்கை இதிகாசத்தைக் கனவிலும் கண்டறியாதவர் போலும்.

இலங்கையை அரசாண்ட அரசர்களுள 'ராசேந்திரசிங்கனே' சிங்களக் கடைசி அரசன். இதன் பின் 'ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன், நமது அரசாணடோர் யாவரும் தமிழர்களே 'சேனன் கூதிங்கள் முதல் இடையிடையே எத்தனை தமிழ் அரசர்கள் இலங்கையை ஏகாதிபதியஞ் செலுத்தினர்.

இவற்றை இப்பிரமுகர் அறிவாரண்மை ஆபாசச் செருக்கால் ஆ_மென்றற்றில் அலறுவதன் அர்த்தமென்ன? சிங்களவரையும் தமிழரையும் விட வேறு எச்சாதியினராவது இலங்கையை ஆட்சிபண்ணினரா?

தமிழரசரின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பு தமிழர் எந்தச் சிங்கள ஆ சிகளுக்கும் நடந்தனர். இ. பி. 1815-ம் ஆண்டு கண்டி பிடிபடும் பரியந்தம் மட்டக்களப்புத் தமிழர், தமிழரசனின ஆட்சிக்குட்பட்டிருந்தனர் எனபதைக் கூறிய பிரமுகர் மனதில் ஊன்றிப்பதிப்பாராக.

தமிழ் மக்களின் தலையைத் தகர்த்தெறியுந் தன்மை தற்போது 'தமிழ காங்கிரஸுக்கே யுண்டு' என பதைத் தானே தோளருத் தம்பிரான் உணர்வாராக.

மேற் மாகாணத்திலிருந்து தனையகருதிச் சம்ரக்ஷணைக்கு வழியற்றுச் சப்பளமடக்காகாயுள்ளன். பியை எதிர்த்துப் பேசி மக்களின் வீடு தோறுஞ் சென்று, பல்லிக் காட்டிப் பாராளுமன்றதிற் சேர்ந்தபின் யு என். பி. யோடு சேர்ந்து தமிழ் மக்களுக்குத் தீங்கு செய்யும் மாய்மாலப்பெரியார் பலருண்டு அவர்களே காட்டிக் கொடுத்த யூகாஸகாரியோததுவாகும்.

மட்டக்களப்பிலுள்ள பல தரப்பட்ட சாதியத்தக்கும் தானே தலைவனெனக் கற்பனை உலகிற்கனவுகாணும் வாயடிப பிரமுகர், தமிழரை அடிமைகளெனச் சொலலுதல் நிந்திதேடிச் சென்ற சகரதரனது நிலைமையை ஒக்கும். எனவே பேச்சாளர்தானை அடிபையாயிருந்தல உசிதம்,

வடமாகாணமும், தென்மாகாணமும் தமிழ் மகாகளை அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் இனி வருங காலததில் பாசாங்குக்காகப்பட மாட்டார்கள்.

எந்த நேரதிலும் தமிழ்க் காங்கிரசோடு ஒத்துழைக்கவுண்கட்டி நிற்கின்றனர் எனபதைப் போலிப் பிரமுகர் வேஷந்தாங்கிய கல்முனை வடாரப் பிரதிநிதி அறியாராக.

சி. மார்க்கசகாயன்,
காரைதீவு,

## ஒருமித்த ஒரு நலன் வேண்டும்

ஐயா,

"1. பொதுக் கூட்டம்.
2. எமதுகில்லென்ன?" இவ்வாறுமுறையே தலையங்கமிடப்பட்ட இரு விளம்பரங்களை பார்வையிடும சந்தர்ப்பம ஏற்பட்டது.

இரண்டும் கொழும்பு நகரமண்டபததில் 30-11-47 காலை 9 30 மணிக்கு கூடிய கூட்டதையே குறிப்பிட்டிருந்தன. இரண்டாவது விளம்பரததில் 'எமதுகில்லை என்ன"? என்ற தலையங்கதுடன் 'எமதுகில்லை விருபி ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும என அறிவிக்கிறோம்" என்றும, ஒப்பம் 'எதல இலங்கைவாழ் வடமாகாண வியாபாரிகள்" என்றும் மிருந்தது. ஆதலால் இது ஒரு சூழ்சுய நலம் விரும்பி வெளியிட்டவர்களபரமென்றே அனுதம் கொள்ளவேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பதில், தமிழ்ச் சாதியாரின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிமிஷததில், தமிழர்களுக்கு ஒற்றுமை தேவை என்பதை வலியுறுத்துவதாலும், சுயநலதை விரும்புகிறவர் எவரும் உண்மைத் தமிழர் ஆகமாட்டார்கள். தமிழ் சாதியாருக்கு பெரும் நன்மை விளைக்கக்கூடிய ஒரு விஷயம் வரக்கூடுமாயின், அதற்காக தமிழரில் ஒரு குறைந்த சத விகிதத்தார் எவ்வளவு தியாகம் செய்தாலும் நலமல்லவா? சரித்திரம் அவர்களைப் போற்றும், பின் சந்ததியாரும் வாழ்த்துவார்கள்.

இங்ஙனம்
வடமாகாண வாசி.

1-12-47.


கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த



# கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஸ. வரதை, எம். எஸ். சுப்புலட்சுமி, எம் ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் இதில் நடித்தனர்

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் தம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

# "இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜீ. ஸி. ரேஞ் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)


## இந்திய ராணுவத்தில் உள்ள கூர்காக்கள்

### பண்டித நேரு அறிக்கை வெளியிடுவார்

புதுடில்லி, டிச. 6

இந்திய சட்ட சபையில் ஸ்ரீ கரணின் கேள்விக்குப் பதிலளித்து பாதகாப்பு மந்திரி கூறியதாவது:-

கூர்க்க துருப்புகள் பற்றி சபையில் ஒரு பொதுவான அறிக்கையை பிரதம மந்திரி கூடிய சீக்கிரம் வெளியிடுவார்.

1947 நவ. 1ஆ மொத்தம் 33000 கூர்க்க துருப்பினர் இருந்தனர். வைசிராய் கமிஷன் அந்தஸ்துக்கு மேல 6 கூர்க்க நிரந்தர அதிகாரிகளும் 26 நெருக்கடி கால கூர்க்க அதிகாரிகளும் பதவி வகிக்கின்றனர். கூர்க்கர்களுக்கு இன்னும் அதிகமான கமிஷன் பதவிகள் அளிப்பது பற்றி சர்க்கார் முயற்சி செய்து வருகிறது உதாரணமாக அவசியமான அளவு கல்வி பயிலாத வைசிராய் கமிஷன் கூர்க்க அதிகாரிகளுக்கு உயர்ந்த பதவிகள் நேரடியாகக் கொடுக்கப்படுகின்றன.

## காந்திஜி பிரார்த்தனைக் கூட்டம்

### ஸ்ரீமதி சுப்புலட்சுமி "ராமதுன்" பாடினார்

புதுடில்லி, டிச. 6

இன்று மாலை காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் தென்னிந்திய பிரபல பாடகி ஸ்ரீமதி சுப்புலட்சுமி "ராமதுன்" பாடினார். இவருடைய குரல் இனிமையைப்பற்றி மகாத்மாஜி பிரஸ்தாபித்தார்.

### காந்திஜியுடன் சர்தார் பேட்டி

புதுடில்லி, டிச 6

இன்று மாலை சர்தார் படேல், காந்திஜியைப் பேட்டி கண்டார்.

ஐம்மூலிலிருந்து திரும்பி வந்த பண்டித நேருவும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும், டாக்டர் ராம்மனோஹர் லோஹியாவும் கூடமகாத்மா காந்தியை இன்று சந்தித்தனர்.

## சீன விமான வீபத்து

### 10 பேர்கள் மாண்டனர்

ஷாங்கை, டிச 7

சீன விமானப் படையினரும் அவர்களது குடும்பத்தினரு மாக 40 பிரயாணிகளை ஏற்றிச் சென்ற சீன ஆகாயப்படையைச் சேர்ந்த விமானம் கேற்று சுங்கின் நகருக்கருகே விபத்துக்குள்ளானதால் 10பேர்கள்மாண்டனர். மற்ற அனைவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 10 பேர்கள் ஆபத்தான நிலையிலிருக்கிறார்கள்.

## இந்திய சர்க்கார் விருந்து

### மதுபானம் அனுமதிக்கப்படமாட்டாது

புதுடில்லி, டிச. 4

சர்க்கார் சார்பில் அளிக்கப்படும் விருந்துகளில் மதுபானம் அளிக்கப்படக் கூடாது என்று உத்தரவிடப்படும் என்று தெரிகிறது.

ராஜாஜி தற்காலிக கவர்னர் ஜெனரலாயிருந்தபோது சர்க்கார் மாளிகையில நடைபெற்ற விருந்துகளில் மதுபானம் அளிக்கப்பட்டதை ஆட்சேபித்து மந்திரிகளிடமும் காங்கிரஸ்தலைவர்களிடமும் புகார் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. உத்தியோகஸ்தர்கள் தற்காலிக கவர்னர் ஜெனரலைக் கலந்தாலோசிக்காமலிருந்திருக்கலாம். அல்லது வேலை தற்காலிகமானதுதானே என்று ராஜாஜியும் இதை மாற்றாலிருந்திருக்கலாம். சில காங்கிரஸ்காரர்கள் ஆட்சேபத்தின் பேரில் இனி சர்க்கார் ஆதரவில் நடைபெறும் விருந்துகளில் மதுபானம் அளிக்கப்படமாட்டாதென்று தெரிகிறது. ஆனால் இதுவரைக்கும் மவுண்ட் பேட்டன் கட்டுப்படுகிறது.

## மட்டக்களப்புக்கு புகையிரதம் ஓடவில்லை

### ரயில் பாதை தண்ணீரால் மூடப்பட்டிருக்கிறது

கொழும்பு, டிச 8

மட்டக்களப்பு பாதையில் வெளிக்கடைக்கும் வாழைச்சேனைக்குமிடையில் பாலத இடையிடையே வெள்ளத்தால் மூடப்பட்டிருப்பதால் வெளிக்கண்டைக்கப்பால் புகையிரத ஓடமுடியாமலிருக்கிறது வெள்ளம் பாய்ந்தொழியுமவரை மட்டக்களப்பு செலலும் இரவு மெயில் வண்டி வெளிக்கண்டையரையும்தான ஓடும். மட்டக்களப்பிலிருந்து இது 19 வது மைல்.

## இந்தியாவின் சர்க்கரை இருப்பு

### முழுதும் இந்திய சர்க்கார் வாங்குகின்றனர்

புதுடில்லி, டிச. 7

இந்தியாவின் எல்லா மாகாணங்களிலுமிருக்கும் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகி இருப்பிலிருந்து வரும் சர்க்கரை முழுவதையும் சர்க்கார் விலைக்கு வாங்குகின்றனர். 1947-ம் வருடத்தில் சர்க்கரைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ள விலைக்கு அந்த இருப்பு முழுதும் வாங்கப்படும். இன்று முதல் சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலைகள் தங்களிடமுள்ள சர்க்கரையை வெளியே அனுப்பாமல் இருப்புக் கணக்கை டிசம்பர் 15-ம் தேதிக்குள் சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும்.

இந்திய மாகாணத்திலும் பிரதானமுள்ள சர்க்கரை ஆலை விலை மணற்குக் 85 ரூ. 7 அணா இந்த விலைக்கு லக்னோ விலுள்ள இந்திய சர்க்கரை சிண்டிகேட் விற்க இணங்கியிருக்கிறது. [அ-பிரஸ]

## இந்திய மந்திரிகளின் சம்பளம்

புதுடில்லி, டிச 8

இந்திய சர்க்கார் மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் 3000 ரூபாய் சம்பளமும் 500 ரூபாய் படிச் செலவும் கொடுக்கவும் மந்திரிகளின் பாராளுமன்ற காரியதரிசிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1250 ரூபாய் சம்பளம் கொடுக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசிக்கு மாதம் 1500 ரூபாய் சம்பளம்.


சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக 1947-ம் ஆண்டின் பி. டீ. இத்தபத்திரிகை 1954, கட்டாரத் தெரு, கொழும்பு, எனும் அச்சுக் கம்பெனியில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிக்காரம் பப்ளிஷர்ஸ் லிமிட்டெட்டினால் வெளியிடப்பெறுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org